
பக்கங்கள்-16 | 21,மாசி.2021 | விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்
0776906182


# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்
புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -334



## ஜனநாயக போராட்டத்தை அச்சுறுத்தும் இலங்கை அரசு பொத்துவில் - பொலிகண்டி வரை

## இன,மதவாத சக்திகளுக்குப் பின்னால் உள்ளஅரசியல் நிகழ்ச்சி நிரல்களையே அரசு தொடர்ந்து செய்து வருகின்றது

## தமிழ் தேசிய அரசியலும் ஊடகங்களின் மாறுப்பட்ட செயற்பாடுகளும்

# ஜனநாயக போராட்டத்தை அச்சுறுத்தும் இலங்கை அரசு பொத்துவில் - பொலிகண்டி வரை

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொண்டவர்கள் மீது அல்லது அந்த போராட்டங்களை முன்னெடுத்து சென்றவர்கள் மீது இலங்கை பொலிஸார் அவர்களிடம் தொடர்ச்சியான விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். இது உண்மையிலே ஜனநாயகத்தை மீறுகின்ற ஒரு செயற்பாடாகத்தான் இது இருக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் 1 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அணி திரண்டதை பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கள பேரினவாதிகள் இன்று பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், இன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் போன்றோர்கள் மீது வழக்கு தொடுப்பதற்காகவோ அல்லது அவர்களின் ஏனைய சூழ்ச்சி திட்டங்கள் என்பது ஜனநாயக ரீதியில் உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாதது ஒன்று. இதுவொரு மக்கள் புரட்சி. மக்கள் புரட்சி தொடர்ந்தும் இவ்வாறான அடக்குமுறைகளை இலங்கை அரசு மேற்கொள்ளுமாக இருந்தால் பாரதூரமான விளைவுகளை இவர்கள் சந்திக்க நேரிடும். அது சர்வதேச ரீதியில் அல்ல. இலங்கையில் தான் இவ்வாறான பிரச்சனைகளுக்கு இவர்கள் முகங்கொடுப்பார்கள். இந்திய அரசாங்கமானது கடந்த காலங்களில் அடக்குமுறைகளை மேற்கொண்டதன் காரணமாகத்தான் ஒபரேசன் பூமாலை என்ற போர்வையிலே இலங்கைக்குள் நுழைந்து பல்வேறு பிரச்சனைகளை தோற்றுவித்தது.




அக்காலகட்டங்களில் ஈ.என்.டி.எல்.எப். ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்கள் உருவாகி சிறிலங்கா அரசுக்கு எதிரான போராட்டங்களை தொடுத்தார்கள். பல இளைஞர்கள் அவ்வாறானதொரு போராட்டங்களுக்கு சென்றதாக வரலாறுகள் இருக்கிறது. அதுபோன்று கோட்டபாயவின் அரசானது கண்மூடித்தனமாக அல்லது தமிழ் மக்களை மிரட்டுவதற்காக அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களை மிரட்டி இன்னும் பல்வேறுபட்ட விடயங்களை செய்யக்கூடாது என்பதற்காக போராட்டங்களை நடத்த கூடாது என்பதற்காக மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொண்டார்கள். இது சர்வதேச ரீதியாக உண்மையில் பார்க்கப்படவேண்டியது ஒன்று. சர்வதேச நீதிமன்றம் இதற்கான பதிலை கூற வேண்டும். ஆனால் இவ்வாறான கெடுபிடிகளை இவர்கள் நிகழ்த்துவதன் ஊடாக அதாவது ஒரு நாட்டிலே சுதந்திரதினம் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் பொழுது இந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதிலே சாணக்கியன், சுகாஸ், சுமந்திரன் போன்றோரும் மிக இலாபகரமாக அந்த ஆரம்பத்தை ஆரம்பித்து வைத்ததன் ஊடாக தொடர்ச்சியாக பொலிகண்டியிலே இந்த போராட்டம் முடிவடைந்திருக்கிறது.

ஆகவே தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஒருகுடையின் கீழ் நின்று தொடர்ந்தும் செயற்பட வேண்டிய தேவையிருக்கிறது. முஸ்லிம்களை பொறுத்த வரையில் அந்த தேவைகளை பூர்த்தி செய்துவிட்டு ஜனாசா நல்லடக்கம் செய்வது மட்டுமாக இந்த போராட்டம் இருக்காது. தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும். தொடர்ந்தும் சிறுபான்மை சமுதாயம் ஒடுக்கப்படுகின்ற நிலைமை உருவாக்கப்படும். முஸ்லிம்களை நம்பி தமிழ் உணர்வாளர்கள் தமிழ் தேசியவாதிகள் களத்தில் இறங்குவது மிக ஆபத்தான ஒன்றாக அமையப்போகிறது என்று தற்போதைய நிலைப்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. பள்ளி வாசல்களில் அறிவித்திருக்கிறார்கள். நிபந்தனையற்ற அரசினுடைய உடன்பாட்டிற்கு சம்மதம் என ரிசாட் பதியூதின் அறிவித்திருக்கிறார். இவ்வாறு முஸ்லிம் தலைமைகள் அறிவித்திருக்கிறது. ஆகவே இவர்களை நம்பி களத்தில் இறங்கக்கூடாது. வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்படும் என்ற நோக்கிலும் இலக்கிலும் வடகிழக்கு தமிழர் தாயகத்தோடு ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்பதையும் இந்த இடத்தில் கூறிக்கொள்வதோடு தமிழ் மக்களுக்கான அடக்குமுறை தொடர்ந்தும் நடை பெறுமாக இருந்தால் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றியும் தமிழ் மக்கள் சிந்திக்க நேரிடும் என்றவொரு விடயத்தை நாம்வெளிப்படையாககூறிநிற்கின்றோம். கடந்தகால அரசியல் பற்றி பேசியும் அதுபற்றி யோசித்துக்கொண்டிருப்பதிலும் எந்த வித பயனுமில்லை. சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு வீற்றோ பவர் கொண்ட நாடுகளின் உதவியோடு பெற்றுக்கொள்ளும் ஒரு முயற்சியாக தற்போது இடம்பெறுகின்ற இராஜதந்திர ரீதியிலான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றது. இதற்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் என்பது தொடர்ந்தும் ஏறிவிடப்பட்டதொன்றாகவே இருக்கிறது. காலத்துக்கு காலம் அரசாங்கம் தம்முடைய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை மாற்றிக்கொள்வதோடு தமக்கு சார்பான அரசியல் கட்சிகளை தேர்ந்தெடுத்து முஸ்லிம் அரசியல் தலைமைகளை தமிழ் மக்களுக்கு எதிராக திசை திருப்பி ஐ.நா சபையில் இலங்கைக்கு எதிராக இடம்பெறுகின்ற போர்க்குற்ற விசாரணை இனப்படுகொலை எதுவுமே இந்த நாட்டில் இடம்பெறவில்லை என்பதை வெளிச்சம் போட்டு காட்டுவதற்கான ஒரு நடவடிக்கையாகவே இன்றைய அரசியல் அமையப்பெறுகிறது. அபிவிருத்தி என்ற போர்வையில் நாட்டை கட்டியெழுப்புகின்றோம் என்று அரசாங்கம் கூறிக்கொண்டு தனது அரசியல் செல்வாக்கை பெற்றுக்கொள்வதற்காக தமது குடும்ப அரசியலை நிலை நாட்டுவதற்காக போருக்கு பின்னர் இவர்களுடைய அரசியல் செயற்பாடு என்பது தமிழினத்தை ஓரங்கட்டுகின்ற ஒரு செயற்பாடாகவே அமையப்பெற்றுள்ளது. அல்பட்துரையப்பா தொடக்கம் லக்ஸ்மன் கதிர்காமன் வரை 172 அரசியல் புத்திஜீவிகள் ஏன் கொலை செய்யப்பட்டார்கள் இவர்கள் தமிழர் பிரச்சனையில் தீர்வை தருகிறோம் என்று கூறிக்கொண்டு அரசாங்கத்துடன் கைகோர்த்து தமது சுகபோக வாழ்க்கைக்காக அரச ஊதியத்தையும் பெற்றுக்கொண்டு பாராளுமன்ற காலங்களை கழித்த பின்னர் இவர்களுடைய தன்னிச்சையான செயற்பாடு என்ன என்பது மக்களுக்கு தெளிவாக புலப்படுகிறது. 30 வருடகால போராட்டமானது நமக்கு கற்பித்த பாடங்களான போர்க்குற்றம் இனப்படுகொலை காணி அபகரிப்பு மதத்திணிப்பு போன்ற விடயங்களே அரசாங்கம் மும்முரமாக முன்னெடுத்தது. இவ்வாறான காரணங்களை பார்க்கும் பொழுது அரசாங்கத்திற்கு தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதில் அக்கறை இல்லை என்பதனையே எடுத்துக்காட்டுகிறது. சந்தர்ப்பம் சூழ்நிலை என்பது அரசாங்கத்திற்கு தற்பொழுது சாதகமாக அமைந்துள்ளது. ஆனால் இதனை பயன்படுத்துகின்றமுறைஎன்பதுசர்வதேச போர்க்குற்ற விதிமுறைகளுக்கப்பால் என்பதும் புலப்படுகிறது. எனவே சர்வதேச ரீதியாக இலங்கைக்கு கொடுத்துள்ள அழுத்தங்கள் என்பது ஒரு இனத்திற்காக போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அவர்களுடைய போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை காலத்திலும் எந்த வன்முறைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படவில்லை.




ஆகவே சர்வதேசம் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கடப்பாடு இருக்கிறது. இலங்கை அரசானது தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் கண்மூடித்தனமாக சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். புத்த பகவானினுடைய கொள்கை என்பதும் ஏனைய தெய்வங்களின் கொள்கை என்பதும் சமாதானத்தை வலியுறுத்தியே செயற்படுகிறது. சிங்கள பேரினவாதிகளை பொறுத்தவரையில் பௌத்த சமயமானது சிங்களவர்களுக்கே சொந்தம் என் பாணியிலும் இது பௌத்த நாடு என்ற பாணியிலும் அவர்கள் செயற்பட்டுவரும் விதம் வரவேற்கத்தக்கது. ஆகவே தமிழ் மக்களுடைய எழுச்சியை கண்டு இது பௌத்த நாடு அற்றுப்போகும் என்ற பயமும் அவர்கள் மத்தியில் இருக்கிறது. தீர்வு திட்டங்கள் தொடர்பாக தற்பொழுது ஜெனீவாவில் பேசப்படுமோ இல்லையோ புலம்பெயர்ந்த தளத்தில் வாழும் தமிழ் மக்கள் தற்பொழுது தமிழ் மக்களின் பாரிய சக்தியாக இருக்கிறார்கள் என்பதே இன்றைய யதார்த்தபூர்வமான உண்மை.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியரபீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## இலங்கை பௌத்த நாடு எனக்கூறி சிறுபான்மை இனத்தை புறக்கணிக்கும் அரசு

இலங்கை பௌத்த நாடு என்ற ஒரு தவறான கூற்று இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை இனமான தமிழ் முஸ்லிம் இனங்களைதற்பொழுதுகூறுபோட்டுள்ளது. ஆகவே மதவாத அடிப்படையில் ஒரு இனத்தை பிளவுபடுத்துவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும். இந்துக்களும் தொடர்ந்தும் இந்த நாட்டில் மத அரசியலை செய்வார்களாக இருந்தால் அது சிங்கள இனத்திற்கு சாதகமாக அமைந்து விடும். ஆகவே சிங்கள மக்களை பொறுத்தவரையிலும் மதரீதியிலான ஒருமைப்பாட்டுடன் மொழியால் ஒன்றுபட்டு செய்யப்படுகின்ற செயற்பாடுகளை தமிழினம் தொடர்ந்தும் அரசியல் தளத்தில் சமவலுவுடன் செல்வதற்கான சாத்தியங்களாக அமையும்.

சிங்கள பேரினவாதிகளை பொறுத்தவரையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோர பகுதிகளை சுபீகரிக்கும் நடவடிக்கைகளையும் தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் மலைகளையும் நிலங்களையும் சுரண்டுகின்ற ஒரு அரசாக இந்த அரசு செயற்பட்டுவருகிறது. மலைகளும் குன்றுகளும் அரச மரங்களும் இருக்கின்ற இடங்கள் எல்லாம் பௌத்த விகாரைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் அண்மைக்காலமாக மேற்கொண்டு வருகிறது. அரசானது தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டங்களை முன்னெடுத்தனர். அவ்வாறான செயற்பாடுகளை தூண்டுவதற்கு இந்த அரசாங்கமே காரணமாக அமைந்து வருகிறது. தொடர்ந்தும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டங்களை முன்னெடுக்க தமிழ் தரப்பு தயாராகி வருகிறது.

இதற்கிடையில் அரசாங்கம் இலங்கை நாட்டில் புதிதாக 1000 புத்தர் சிலைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. பௌத்த சாசனம் என்ற ஒன்றை அரசாங்கம் முன்னிலைப்படுத்தி பௌத்த துறவிகளை தமிழினத்திற்கு எதிராக தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றன. மதவாத அரசியல் இந்த நாட்டில் இருந்து தோற்கடிக்கப்படும் வரை இனவாதஅரசியல் இருந்துகொண்டே இருக்கும். மாற்றத்திற்கான பல அமைப்புகள் செயற்பட்டாலும் அந்த மாற்றத்தை கொண்டுவருவதற்கான செயற்திட்டம் என்பது பௌத்த சாசனத்திலே தங்கியுள்ளது. இனவாத பௌத்தவாதிகள் தொடர்ந்தும் இந்த நாட்டில் ஏதோ ஒரு வகையில் சர்ச்சையை உருவாகிக்கொண்டே இருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி தொடர்ந்தும் தமிழினத்தின் மீது திணிக்கப்பட்டுவருகின்ற அடக்குமுறை என்பது காலத்துக்கு காலம் வேறுபட்டாலும் சிங்கள பேரினவாதிகள் அந்த குறித்த குறிக்கோளில் இருந்து விலகிப்போவதில்லை. மகாவம்சம் சொல்லுகின்ற விடயங்களை வைத்து அனைத்து விடயங்களையும் கூற முடியாது. காரணம் மகாவம்சத்தை எழுதி திரிவுபடுத்திய மகாநாமக்க தேரர் அதையே இன்றுவரை சிங்கள மக்கள் நம்புகிறார்கள். தமிழ் மக்களை பொறுத்தவரையிலும் இனமத மோதல்கள் ஏதுமின்றி இந்த நாட்டில் செயற்படவதன் ஊடாகவே சுமூகமான நிலையை தோற்றுவிக்க முடியும் இல்லையேல் ஆபத்து.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**137**

காப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்ற கெரில்லாப் பிரிவுக்கு இயந்திரச் சுடுகலன்கள் வழங்கப்படுவதுடன் பின்புலத்திலிருந்து தாக்குதலைத் தொடுப்பதற்கான பிரிவுக்கும் தரப்படுகின்றது. எதிரி புதிய திசையில் தாக்குதலைத் தொடுப்பானாயின் அதனை எதிர்கொள்கின்ற பிரிவுக்கும் இயந்திரச் சுடுகலன்கள் கொடுக்கப்படுகின்றன.

முற்றுகையிலிருந்து வெளியேறுகின்ற சகல சமர்க்கட்டத்திலும் புதிய இடத்திற்குச் செல்லும்போதும் பலப்படுத்தப்பட்ட வேவுடனேயே நகரப்படுகின்றது. வேவின் போது பின்வருவனவற்றை அவசியம் தெளிவுபடுத்த வேண்டும். எதிரியின் படைபலம், தாக்குதலுக்கான அவற்றின் குழுக்கள், புதிய எதிரிப் படைகள் வரக்கூடுமா, கெரில்லாப் படைப்பிரிவு பின்வாங்கவுள்ள பாதைகளில் எதிரி நடமாடுவானா போன்றனவாகும்.

முற்றுகையிலிருந்து வெளியேறல் - இது நெருக்கடியான கணப்பொழுதாகும். இதன் போது, கடின ஒழுங்கும் கெரில்லாக்கள் மத்தியில் ஒழுக்கமும் மிக முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. எந்தவிதமான பயப்பீதியும் கலக்கமும் தேவையற்ற ஓட்டம்பிடித்தலும் இருக்கக்கூடாது! இவற்றை மிகச் சரியாகத் தீர்மானமெடுத்த முறையில் கடந்துகொள். சகலதும் கட்டளைப் படியும் கட்டளையாளனின் சொற்படியும் மாத்திரமே நிறைவேற்றப்பட வேண்டும்.

முதலாவதாக மிகக் கடினமான நிலைக்கு ஆளாகியுள்ள கெரில்லாக் குழுக்களை வெளியேற்ற வேண்டும். எதிரியின் விஞ்சிய படைபலத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட தாக்குதலை எதிர்கொள்ளும் குழு, வெற்றிகரமான தற்காப்பிற்குச் சாத்தியமற்ற பிரதேச நிலையமைப்பைக் கொண்டிருக்கின்ற குழு போன்றன. இக்குழுவுடன் சேர்த்து விழுப்புண்ணடைந்துள்ள நோய்வாய்ப்பட்டுள்ள கெரில்லாக்களையும் அனுப்ப வேண்டும். அத்துடன் ஆயுதச் சேமிப்பையும் உணவுப்பொருட் சேமிப்பையும் அனுப்ப வேண்டும்.

எதிரிப் படையின் முற்றுகையிலிருந்து வெளியேறியதும் இக்குழுவினர் வேகமாகத் தம்மை ஒழுங்குபடுத்தி ஏனைய கெரில்லாக்களுக்குச் சூட்டாதரவை வழங்குவதற்காக நிலைகளைத் தயார்ப்படுத்துகின்றார்கள். பின்புலத்திலிருந்து எதிரிக்குத் தாக்க வேண்டிய சூழ்நிலை வேண்டப்படுகின்றதென்றால் ஒரேநேரத்தில் இக்குழு அதற்கும் தயார்ப்படுத்துகின்றது. ஆனால் இந்நேரத்தில் காயமடைந்த நோய்வாய்ப்பட்ட கெரில்லாக்கள் ஆயுத, உணவுப்பொருட்




சேமிப்புடன் நியமிக்கப்பட்ட ஒன்று சேருமிடத்தை நோக்கி நகர்வார்கள்.

தமது தோழர்கள் பின்வாங்குவதற்குக்காப்பளிக்கின்ற சகல கெரில்லாக்களும் தமது பழைய இடத்திலேயே தங்கிநின்று, பலத்தைக் குறைக்காமல், மாறாக எதிரி பின்வாங்கலைப் பற்றிச் சந்தேகிக்காதவண்ணம் சூடுகளை அதிகமாக்குவார்கள். எதிரியின் எல்லைக்கப்பால் பிரதான கெரில்லாப் படைகள் சென்றவுடன், கட்டளையாளனின் கட்டளைப்படி காப்பளிக்கின்ற வீரர்கள் வேகமாகப் பின்வாங்குவார்கள். இதன் போது எதிரி பலமான சூடுகளை மேற்கொள்வானானால், காப்பணியின் பின்வாங்கல் ஒரு நிலையிருந்து இன்னொருநிலைக்கு ஓடிக்கடத்தலாக அமைகின்றது. காப்பளிக்கின்ற வீரர்களுடன் பக்கங்களுக்குக் காப்பளிக்கின்ற கெரில்லாக்களும் இணைந்து கொள்கின்றார்கள்.

இந்நேரத்தில் பிரிவு பிரிவாக வெளியேறிய பிரதான கெரில்லாப் படைகள் குறித்த ஒன்றுசேருமிடத்தில் அணிதிரள்வார்கள். இங்கே படைப்பிரிவு வேகமாகத் தம்மை ஒழுங்குபடுத்தி, வேவு மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டளையாளனால் குறிக்கப்பட்ட பிரதேசத்திற்கு நகரும்.

முதலாவதாக வெளியேறிய கெரில்லாக்குழு தமது நிலையில் தொடர்ச்சியாக இருந்துபடைப்பிரிவு பின்வாங்குவதற்காகவும் எதிரி பின்தொடரலை ஒழுங்குபடுத்த முடியாதவாறும் காப்பளிக்கின்றது. 2 - 3 கி.மீ இற்குக் குறையாத தூரத்திற்குப் படைப்பிரிவு பின்வாங்கியிருக்கக்கூடிய நேரம் வந்ததும் இக்குழு வேகமாகப் படைப்பிரிவு நகர்கின்ற திசைக்கு வேறுபக்கத்தில் பின்வாங்கிச் செல்கின்றது. இவ்வாறாகப் பிழையான திசையில் எதிரியைத் திசைதிருப்பி இக்குழு இழுத்துச் செல்கின்றது. பின்னர் எதிரியிடமிருந்து தங்களைச் சடுதியாக அறுத்துக்கொண்டு மிகச்சிறிய குழுக்களாகப் பிரிந்து அல்லது ஒவ்வொருவராகப் பிரிந்து பரவிச்சென்று, படைப்பிரிவு இருக்கின்ற புதிய இடத்தில் கூடுகின்றார்கள்.

பாசிச ஆக்கிரமிப்பாளர்களுடனான கொடிய சமரில் எமது கெரில்லாக்கள் ஏற்கனவே கூடியளவு அனுபவங்களைப் பெற்றுள்ளார்கள். இந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே இங்கே தரப்பட்டுள்ள இந்த விதிமுறைகளும் பரிந்துரைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் இது ஒவ்வொரு சமயத்திற்குமான மருந்துச் சீட்டுத் துண்டன்றி செயற்பாட்டிற்கான பொதுவான வழிநடத்தல் மாத்திரமே. கெரில்லாச் சமரில் மாதிரியமைப்பு இருக்க முடியாது. சகலதும் பல காரணிகளில் தங்கியிருக்கின்றன. பிரதேசச் சூழல் பொதுவான இராணுவ மற்றும் அரசியல் நிலைமை கெரில்லாப் படைப் பிரிவினது கட்டளையாளனின் முன்முயற்சி போன்றன. எதிரியையும் அவனது இராணுவத் தொழினுட்பங்களையும் பொருட்களையும் அழிப்பதற்கு ஒவ்வொரு முறையும் புதிய வழிவகைகளைக் கண்டுபிடி. பிரதானமாக நினைவிற்கொள்ள வேண்டியது யாதெனில் கெரில்லாக்களின் பிரதான போதனை - முன்னேறுதல், முன்னேறுதல், முன்னேறுதல். ஒரு இடத்திலிருந்து சுறுசுறுப்பற்ற நிலையில் செயற்படுவாயாயின், பயனற்ற முறையில் உனது வலிமையைச் செலவழித்து, உன்னை எதிரியின் கையில் கொடுத்துவிடுவாய். தீர்க்கம், திடம், செயலூக்கமான முன்னேறித் தாக்கும் செயற்பாடுகள் ஆகியன யாவும் கெரில்லாச் சமரில் வெற்றியடைவதற்கான உத்தரவாதங்களாகும்.

### வேவு

கெரில்லா வேவின் பிரதான ஒழுங்குவிதிகளை நினைவிற்கொள்.

நீ சகலத்தையும் காண்பாய், ஆனால், உன்னை யாரும் காணமாட்டார்கள். எதிரிக்கு உன்னை இனங்காட்டுகின்றாய் என்றால் அதன் அர்த்தம் யாதெனில் முழுப்படைப்பிரிவையும் இனங்காட்டுகின்றாய். ஆகவே மறைவாகச்செயற்படு.

நினைவிற்கொள்: நீ எதிரியின் பின்புலத்தில் இருக்கும் போது உனது படைப்பிரிவும் அருகில் இருக்கின்றது.

தொடர்வான்...
**நெற்றிப்பொறியன்**

# இனமதவாத சக்திகளுக்குப் பின்னால் உள்ள அரசியல் நிகழ்ச்சி நிரல்களையே அரசு தொடர்ந்து செய்து வருகிறது

ஹலால் முதல் அழுத்கமை வரையிலான அனைத்து காழ்ப்புணர்வு வன்முறை கட்டவிழ்ப்புகளிற்கும் பின்னால் தேசிய பிராந்திய பூகோள அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் இருப்பதனை அவ்வப்போது சுட்டிக்காட்டினோம்.

அதே போன்றே இந்தநாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் அத்தகைய நிகழ்ச்சி நிரல்கள் ஒருபொழுதும் காலாவதியாவதில்லை என்பதனையும் நீறுபூத்த நெருப்பாக இருந்து காலத்துக்குக் காலம் சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைகின்ற பொழுதெலாம் அவை தலை விரித்து தாண்டவமாடும் என்றும் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தோம்.

முஸ்லிம்களைப் பொறுத்த வரை அவ்வப்போது சந்தர்ப்பங்களை சமாளிக்கவும் பின்னர் மறந்துவிடவும் கூடிய உஷார் மடையர்கள் போல் செயலாற்றுவதில் அல்லது எதிர்வினையாற்றல்களோடு நின்று கொள்வதில் பிரசித்தமாக இருக்கின்றோம்.

அண்மைக் காலமாக தலைதூக்கும் இனமத வெறி சக்திகளை அரசு ஏன் கண்டுகொள்வதில்லை, அரச ஊடகங்கள் அவர்களுக்கு ஏன் சந்தர்ப்பங்களை வழங்குகின்றார்கள், தனியார் ஊடகங்கள் விடயத்தில் காழ்ப்புணர்வுப் பரப்புரைகளை தடைசெய்கின்ற சட்டங்கள் ஏன் அமுலாக்கப் படுவதில்லை? என பலரும் கேள்வி எழுப்புகின்றார்கள்.

தற்போதைய தேசிய அரசில் ரணில் மைத்திரி புரிந்துணர்வுடன் செயற்பட்டாலும் அவ்விருவரும் இரு பிரதான தேசிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் ஆவர்.

பெரும்பான்மை சமூகத்தின் ஆதரவுத்தளம் குறித்த அவர்களது கரிசனை, கட்சி அரசியலில் மக்கள் பிரதிநிதிகளின் அரசியல் காய் நகர்த்தல்கள், அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற பெரும்பான்மை நெருக்கு வாரங்கள், மதகுருமார்களின் அழுத்தங்கள், கடும்போக்கு சக்திகளை கையாள்வதில் உள்ள உள்நாட்டு, வெளிநாட்டு நெருக்குதல்கள் அரசியல் இராஜ தந்திர நகர்வுகள் என பல பரிமாண சவால்கள் அவர்களது நிலைப்பாடுகளிலும் தாக்கம் செலுத்துகின்றன.

தென்னிலங்கையில் சிங்கள முஸ்லிம் கலவர நிலையினை தோற்றுவித்து நல்லாட்சி அரசிற்கு நெருக்கடிகளை கொண்டுவருகின்ற நோக்கில் சில கடும்போக்கு சக்திகளை கருவிகளாக பயன்படுத்துகின்ற மறை முகமான நிகழ்ச்சி நிரல் அல்லது சூழ்ச்சி இருப்பதாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரும் ராவய பத்திரிகையின் 30 வது ஆண்டு நிகழ்வில் தெரிவித்திருந்ததோடு தராதரம் பார்க்காமல் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கையும் விடுத்திருந்தனர்.

இவ்வாறான ஒரு பின்புலத்தில் தான் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அரசின் நிலைப்பாடு குறித்து பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார், அவரது உரையில் முஸ்லிம்களையும் இஸ்லாமிய அமைப்புகளையும் பற்றி அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் மற்றும் ISIS தொடர்பான காலம் கடந்த புலனாய்வுத் தகவல்கள் என்பன கடும்போக்கு சக்திகளை ஆற்றுப் படுத்துவதாகவும் முஸ்லிம்களை ஆத்திர மூட்டுவதாகவும் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### தேசிய அரசியல் களநிலவரங்கள்:

இன்று தேசிய அரசியலில் குறிப்பாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மூன்றாவது அணியாக முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் அவர்களோடுள்ள கடும் போக்கு உதிரிக் கட்சிகளும் களமிறங்குகின்ற சமிக்ஞைகளை வெளியிட்டு வருவது அரசிற்கு பன்முக சவால்களை தோற்றுவித்துள்ளது.

மேற்படி தரப்பினர் மீண்டும் தமது பலமான அரசியல் பிரவேசத்திற்கு கடும்போக்குவாத இனமதவெறி பரப்புரைகளில் தங்கியிருப்பதனை குறிப்பாக சிறுபான்மை இனங்களுக்கெதிரான அரசியல் பரப்புரைகளில் ஈடுபாடு காட்டுவதனை நாம் அறிவோம்.

அதே வேளை சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் மஹிந்த அணி பிளவு படுவதை ஏதேனும் வகையில் கையாள்வதன் மூலம் மாத்திரமே உள்ளூராட்சி தேர்தல்களில் மாத்திரமன்றி எதிர்கால பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முகம்கொடுக்கும் வகையில் சுதந்திரக்கட்சி பலப் படுத்திக் கொள்ளும் கடப்பாடு ஜனாதிபதி மைத்திரிக்கு இருக்கின்றது.

அதே போன்றே ஏதோ ஒரு வகையில் சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத்தவேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சியிற்கு இருப்பதனை அண்மைக்கால நகர்வுகள் உணர்த்துகின்றன. குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ அணியினரை பிரித்தெடுப்பதில் அவர்களுக்கு சாதகமான அரசியல் சூழ்நிலைகள் இருக்கின்றன.

இந்த நிலையில் தான் பல்வேறு பாரிய ஊழல் மோசடி குற்றங்களுக்காக பிடிக்கப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரும் பல்வேறு அரசியல் நகர்வுகளில் புரிந்துணர்வுகளில்பெரும்நம்பிக்கைகளுடன் ஈடுபாடுகாட்டி வருகின்றனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் அரசியலுக்கு வருவாரா? அதிபர் மஹிந்த பிரதமர் வேட்பாளராக வருவாரா..? அவர்கள் அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டால் சந்திரிக்கா அம்மையார் தேசிய அரசிற்கான ஆதரவை விலக்கிக் கொள்வாரா? என்றெல்லாம் செய்திகள் அடிபடுகின்றன.

இவ்வாறான அரசியல் கள நிலவரங்களில் மூன்றாம் அணியினருக்கும் கடும்போக்கு உதிரிக்கட்சிகளுக்கும்ஏற்பட்டுள்ள சாதகமான சந்தை வாய்ப்புக்கள் அவர்களுக்கு துணை போகும் இன மத வெறிக் கும்பல்களிற்கு மிகச் சாதகமான களநிலவரங்களை தோற்றுவித்துள்ளன.

எனவே, இவ்வாறான தேசிய அரசியல் கள நிலவரங்களை, தேசிய அரசியல் தலைமைகளின் திரிசங்கு நிலைமைகளை கவனத்தில் கொண்டு சிறுபான்மை சமூகங்கள் குறிப்பாக முஸ்லிம் அரசியல் சிவில் சன்மார்க்கத் தலைமைகள் கூட்டுப் பொறுப்புணர்வுடன், சாணக்கியமாகவும், சாதுரியமாகவும் சமூகத்தின் தேசிய நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க வேண்டும்!

### சர்வதேச பிராந்திய அரசியல் இராஜதந்திர நகர்வுகள்:

அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரை தீவிரப்படுத்தியிருந்த நிலையில் மேலைத்தேய நாடுகளுடன் இராஜதந்திர முறுகல் நிலையை தோற்றுவித்திருந்தார், நோர்வே மத்தியஸ்தம் முற்றாக நிராகரிக்கப்பட்டது, மனித உரிமை மீறல்கள் குற்றச் சாட்டுகளுடன் இலங்கை மீது மேலைத்தேயம் எகிறிக் குதித்தது.

unhrc-in-sessionபோருக்குப் பின்னரான இலங்கையில், பிராந்தியத்தில் மேலாதிக்க சக்திகளின் முஸ்தீபுகள் அதிகரித்தன சீனாவுடனான நெருக்கமான உறவு சர்வதேச சமூகம் என்ற மேலைத்தேய சக்திகளிற்கும் இந்தியாவிற்கும் பெரும் சவாலாக இருந்தது, ஐ.நா மனித உரிமை ஆணையகத்தில்



அமெரிக்க நோர்வே இஸ்ரவேல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக் கெதிராக தீர்மானங்களை கொண்டு வந்த பொழுது இந்தியாவும் ஆதரவை அளித்தது. ஈரான் லிபியா பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகள் யுத்த காலத்திலும் போருக்குப் பின்னர் வேளைகூடா முஸ்லிம் நாடுகளும் இலங்கைக்குஆதரவை அளித்தன, இலங்கை முஸ்லிம்களும் அமெரிக்க தலைமையிலான மேலைத்தேய நெருக்கடிகளின் பொழுது இலங்கை அரசிற்கு ஆதரவளித்தனர், வீதிகளில் இறங்கி ஆர்பாட்டம் செய்தனர்.

இவ்வாறான நிலையில் தேசிய அரங்கிலும் சர்வதேச அரங்கிலும் இலங்கை அரசிற்கான முஸ்லிம்களது ஆதரவுத்தளத்தை இலக்கு வைத்து பல்வேறு நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன, முஸ்லிம் விரோத சக்திகள் ஊக்குவிக்கப்பட்டன.

ஏக கலாத்தில் மஹிந்த அரசை அடிபணியச் செய்வது அல்லது இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது மேலைத்தேய மேலாதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் இருந்தது, மனித உரிமை மீறல்கள் அழுத்தத்திலிருந்து விடுபடவும், போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் அப்போதைய இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கெதிரான சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முனைப்புக் காட்டியது.

SL MUSLIMS இல்லாத பயங்கரவாதம், அடிப்படை வாதம் , தீவிரவாதங்களை இலங்கையில் அரங்கேற்ற பல்வேறு உள்நாட்டு பிறநாட்டு சக்திகளும் கூலிப் படைகளும் களத்தில் இறங்கின. இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களிற்கும் எதிராக சர்வதேச அரங்கில் சந்தைப்படுத்தப்படும் "இஸ்லாமோபோபியா" இலங்கையில் சந்தைப்படுத்தப்பட்டது.

நாட்டில்இராணுவத்தின்பிடியை ஸ்திரப்படுத்த வேண்டிய தேவைப்பாடு அன்றைய அரசிற்கு இருந்தது, அதற்கான நியாயங்கள் தேவைப்பட்டன.

ஹலால் முதல் அளுத்கமை வரை முஸ்லிம்கள் மீது காட்டுமிராண்டித் தனங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன, முஸ்லிம் அரசியல் தலைமைகள் எவ்வாறு போனாலும் சிவில் சன்மார்க்கத் தலைமைகள் முஸ்லிம்களை சரியாக வழிநடத்தியமை முஸ்லிம்கள் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டமை , சமாதான சகவாழ்வு நிகழ்ச்சி நிரலை தீவிரப் படுத்தியமை நாடு தழுவிய அமைதியின்மை ஏற்படுவதனை தவிர்த்தது. இது குறித்து பல தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் திருப்தியை வெளியிட்டிருந்தன.

இவ்வாறான ஒரு அரசியல், இராஜதந்திர களநிலவரங்களின் பின்புலத்தில் நாடு எதிர் கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியையும் கவனத்தில் கொண்டு தான் ஜனாதிபதித் தேர்தலை அதிபர் மகிந்த ராஜபக்ஷ இரண்டு வருடங்களிற்கு முன்னரே நடாத்தி தனது நிலையை மேலும் ஸ்திரப்படுத்திக்கொள்ள முன்வந்தார்.

### ஆட்சி மாற்றமும் இனவாத சக்திகளும்:

இலங்கையில்நல்லாட்சிமாற்றம்நிகழ்ந்தமை உண்மைதான், அதற்கு முஸ்லிம்களும் பிரதான பங்களிப்பினைச் செய்தார்கள், தமிழர்களும் செய்தார்கள், தேசிய அரசியல் சக்திகளும் செய்தன, பின்னால் சர்வதேச பிராந்திய சக்திகளும் செய்தன.

ஆனால், இனவாத சக்திகள் அழிந்துவிடவில்லை, அவர்களை பின்னாலிருந்து கருவிகளாக இயக்குகின்ற பிராந்திய மற்றும் சர்வதேச மேலாதிக்க சக்திகள் அழிந்துவிடவில்லை, மீண்டுமொரு ஆட்சிமாற்றத்தைவிரும்புகின்றபுதியசக்திகள் தோன்றுவதற்கான அதே வழிமுறைகளை புதுப் புது வடிவங்களில் களநிலவரங்களில் கையாள்வதற்கான சாத்தியப்பாடுகளும் இல்லாமல் இல்லை.

கடந்த காலங்களில் இனமத வெறி கடும் போக்கு நிகழ்ச்சி நிரல்களை தீவிரமாக முன்னெடுத்த சக்திகள் நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதான பதவிகளை வகிப்பதாக முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் தெரிவித்துள்ளனர்.


நாம் நிகழ்வுகளால் உந்தப்படுகின்றோம் நிகழ்ச்சி நிரல்களை மறந்து விடுகின்றோம்

முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான சவால்களை இன ரீதியாகவோ, மத ரீதியாகவோ, பிரதேசரீதியாகவோ, மொழிரீதியாகவோ நாம் அணுகாது, தேசத்தில் உள்ள சகல முற்போக்கு தேசிய சக்திகளுடனும் இணைந்து அவற்றை தேசிய பாதுகாப்பிற்கும், சமாதான சகவாழ்விற்கும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கும், தேசத்தின் ஸ்திரத் தன்மைக்கும், அபிவிருத்திற்கும் விடுக்கப்படும் சவால்களாக நாம் எதிர்கொள்ளல் வேண்டும்.

இனவாத மதவாத சக்திகள் எந்த தரப்பில் இருக்கின்றார்கள் என்பதனை விட குறிப்பிட்ட தரப்புக்கள் அத்தகைய சக்திகளை எவ்வாறு கடந்த காலங்களில் கையாண்டார்கள், எதிர்காலத்தில் கையாள்வார்கள் என்பதிலேயே நாம் அவதானமாக இருக்க வேண்டும். அம்பையும் ஈட்டியையும் யார் யார் எவ்வாறெல்லாம் பயன்படுத்துகின்றார்கள் என்பதே எம்முன்னுள்ள பிரதான கேள்வியாகும்.

தெளிவான தேசிய சமூக பார்வையும், கூட்டுப் பொறுப்பும், மூலோபாய திட்டமிடல்களும் இல்லாமல் பயணிக்கும் ஒரு சமூகம் அடுத்தடுத்த சமூகங்களை நொந்து கொள்வதில் அர்த்தமில்லை, அரசியலும் இராஜதந்திரமும் முஸ்லிம் சமூகம் பறிகொடுத்து பரிதவிக்கும் ஆயுதங்களாகும்!"

# தமிழ் தேசிய அரசியலும் ஊடகங்களின் மாறுபட்ட செயற்பாடுகளும்



தமிழர்களின் தாயகம் நோக்கிய போராட்டங்கள் ஆரம்பித்த காலகட்டங்களில் ஊடகங்கள் அப்போராட்ட நிலைக்கு பல அளப்பரிய பங்களிப்புகளையும், நியாயபூர்வத் தன்மைகளையும் உலகிற்கு எடுத்தியம்பியதுடன் அவ் செயற்பாடு காரணமாக பல ஊடகவிலாளர்கள் அரச இயந்திரத்தால் படுகொலை செய்யப்பட்ட வரலாறுகள் உள்ளன. உலகில் இடம்பெற்ற இன விடுதலைப் போர்களின் ஊடான பங்களிப்புகள் அளப்பரியது. ஓர் இனத்தின் அடக்குமுறைகள் கொடுங்கோல் ஆட்சிகள் சர்வதிகார ஆட்சிமுறைகளை வெளிகொணர்வதில் ஊடகங்கள் பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளன.

உலகையே திரும்பி பார்க்க வைத்த யுத்தமும் இனவிடுதலை கோரி போராடும் மக்களுக்கு உத்வேகத்தை அளிப்பதுமான போராட்டமாக பார்க்கப்படும் 1965 - 1974 வரை இடம்பெற்ற அமெரிக்க வியட்நாம் போர். இப்போரில் வியட்நாம் மக்கள் பல பேரழிவுகளை சந்தித்தனர். அமெரிக்காவின் கொடுங்கோல் யுத்தமும் இனவழிப்பும் அங்கு மிகக் கோரமாக அரங்கேறியது. அங்கு நடக்கும் படு கொலைகள் குண்டு வீச்சுகள் எரிகுண்டு வீச்சு அனைத்தும் மிக இறுக்கமாக மூடி மறைக்கப்பட்டன. ஆனால் அமெரிக்காவின் அட்டூழியங்களின் உச்சம் ஓர் ஊடாகவியலாளரினால் வெளியில் வந்தது. 1972 ஆம் ஆண்டு வியட்நாமின் ரான்ங்பாங் கிராமத்தில் அமெரிக்க விமானங்கள் வீசிய எரிகுண்டுகளால் பல அப்பாவி மக்கள் தீயில் எரிந்த நிலை வீதிகளில் ஓடி வந்தனர். அவர்களில் ஒன்பது வயது நேபாள சிறுமியான கிம்பாக் விமானக்குண்டு வீச்சின் எரிவில் தனது உடைகள் அனைத்தும் எரிந்த நிலையில் முழு நிர்வாணமாக வீதியில் கதறியபடி ஓடி வந்த நிலையை ஊடகவியலாளர் படம் பிடித்து 1972 ஆம் ஆண்டு ஜீன் 12 ஆம் திகதி சன் நியூஸ் என்னும் பத்திரிகையிலும் அதனைத் தொடர்ந்து ஏனைய பத்திரிகைகளிலும் அப்படம் பிரசுரிக்கப்பட்டு அமெரிக்காவின் முகமூடி கிளித்தெறியப்பட்டது. அத்துடன் அமெரிக்கா அவமானப்பட்டு வியட்நாமை விட்டு வெளியேறியது.


இதேபோன்று தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டகாலங்களில் தாயகம் சுயநிர்ணயம் முன்னிறுத்தி இடம்பெற்ற போர்களில்அக்காலகட்டங்களில்செய்தித் தணிக்கைகள் ஊடாக அச்சுறுத்தல் என இலங்கை அரசு இறுக்கிய நிலையிலும் அச்சமின்றி தற்துணிவுடன் களத்தில் தமிழ் மக்களின் போராட்ட நியாயத் தன்மையையும் தமிழ் மக்கள் பகுதிகளில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சுகள் ஆட்லறி வீச்சுகளால் கொல்லப்படும் அப்பாவி மக்களின் நிலையினை உலகிற்கு அம்பலப்படுத்தியது. அக்கால ஊடகங்களே. 1987 ஆம் ஆண்டு இந்தியா இராணுவம் இலங்கைக்கு அமைதிப்படை என்ற போர்வையில் வந்து தமிழ் மக்கள் மீது செய்த படுகொலைகளை குறிப்பாக வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற படுகொலைகளை உலகிற்கும் இந்தியாவின் தமிழ் நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தி இந்தியாவின் முகத்திரையை அன்று கிளித்ததுடன் இந்தியா இங்கு இருந்து திரும்பி செல்ல வேண்டும் என்று தமிழ் நாட்டிலிருந்து போராட்டங்கள் வெடித்தமைக்கு வடகிழக்கில் இருந்த ஊடகங்களான ஈழநாடு, ஈழமுரசு, உதயன் அத்துடன் தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்த சில பத்திரிகைகளும் காரணமாக அமைந்தன.

இந்தியா இராணுவம் இங்கு செய்யும் கொடுமைகளை மறைத்து தமிழ் மக்களுக்கு விடிவை பெற்றுத்தர முயற்சிப்பதுபோலஅங்கிருந்துஊடகங்கள் மூலம் செய்திகளை பரப்பி வந்தது. அக்காலகட்டங்களில்இந்தியாவில்இருந்து ஆகாசவானி என்ற வானொலியூடாகவும் தூரதர்சன் என்னும் தொலைக்காட்சி ஊடாகவும் வெற்றிமாலை அன்புவழி நேசக்கரங்கள் என்னும் நிகழ்ச்சிகள் ஊடாகவும் பொய்ப் பிரச்சாரங்களை நெறிப்படுத்தி வந்தது. இருந்த பொழுதிலும் வல்வை படுகொலை இந்தியாவின் முகத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டு காட்டிவிட்டது. அத்துடன் அது அவமானத்துடன் இலங்கையை விட்டு வெளியேறியது 1995 யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததன் பின்னர் யாழ்குடா நாடு ஓர் இராணுவ சிறைச்சாலையாக மாறியது உள்ளுக்குள் இடம்பெறும் கொலைகள் எதுவும் வெளியில் வரா-மல் மூடிய சிறைச்சாலை போல் இருந்த நிலையில் அங்கு இடம்பெற்ற படுகொலைகளை ஊடகங்கள் வெளிக் கொணர்ந்து உலகையை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. குறிப்பாக செம்மணி படுகொலை வெளிச்சத்துக்கு வந்தது. இக்காலகட்டங்களில் இணையத்தள வசதிகள் அற்ற ஓர் காலப்பகுதி நவீன கைப்பேசிகள் அற்ற காலம் இருக்கும் வளத்துடன் ஊடகவியலாளர்கள் தங்கள் உயிரை வெறுத்து மக்களின் அவல நிலைகளை உலகுக்கு தெரியப்படுத்தி வந்தனர்.

தமிழ் மக்களின் தேச விடுதலைக்கானதும் பேரினவாத அடக்குமுறைக்கும் எதிரான போர் உலக வல்லரசுகளின் உதவியுடன் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைக்கப்பட்ட பொழுது அன்று இடம்பெற்ற மனிதப்பேரவலத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டு காட்டியது ஊடகங்களும் இணையத்தள ஊடகங்களும் முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்றெ்றது. ஓர் அப்பட்டமான மனிதப் படுகொலை என்பதை உலகத்தின் கண்முன் காட்டியது இவ் ஊடகங்களே. இவ்வாறான ஊடகங்களில்சிலதற்பொழுது தமிழர்களின் தாயகம், சுயநிர்ணயம், தேசியம் என்ற கோட்பாட்டை விட்டு விலகி நடுநிலைத்தன்மையற்ற பேரினவாத அரசுக்கு விலைபோயும் சில ஊடகங்கள் இலங்கை அரசின் மற்றும் புலனாய்வு அச்சுறுத்தல்களால் நாட்டை விட்டு வெளியேறி சென்றுள்ளனர். தாயகம் நோக்கிய பயணத்தில் தமிழ் மக்களின் நீதியான போராட்டத்துக்கு தமது அளப்பரிய பங்காற்றி சுமார் 35 ஊடகவியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதில் முக்கியமான விடயம் என்னவெனில் தமிழர்களின் சுய உரிமைப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு அதன் நியாயபூர்வத் தன்மையை ஏற்றுக்கொண்ட சகோதர இன ஊடகவியலாளர்களும் இங்கு படுகொலை செய்யப்பட்டனர். சிலர் காணாமல் ஆக்கப்பட்டனர். பல சிரேஸ்ட ஊடகவியலாளர்கள் அரசியல் ஆய்வாளர்கள் என அற்புதமான ஊடகவியலாளர்கள் ஊடக அடக்குமுறை கொண்டு மனித நீதியற்று படுகொலை செய்யப்பட்டு வீதிகளில் போடப்பட்டனர்.

இவ்வாறுதமிழ்மக்களின் உரிமைக்குரலாக ஒலித்த மகத்தான ஊடகவியலாளர்களின் மரணத்தின் மீதேறி இன்றுள்ள சில ஊடகவியலாளர்கள் பயணிப்பதானது மிகவும்கவலைக்குரியவிடயமாகும். அரசின் ஊதுகுழலாக மாறியுள்ளதுடன் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப செயற்படுவதும் ஒவ்வொரு கட்சி சார்ந்து செயற்படுவதும் தனித்தன்மையற்று நடுநிலைமையின்றி செயற்படுவதானது மிகப்பெரும் ஆபத்தை விளைவிக்க கூடியது.

ஓர் நாட்டின் தலைவிதியை மாற்றக்கூடிய சக்தி பேனாவுக்குள்ளது. வெறுமனவே உண்மைக்கு முதலிடம் தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள் நடுநிலை தவறாமல் என வார்த்தைக்கு வார்த்தை கூறிக்கொண்டு பக்க சார்பாகவும் நடுநிலையற்றும் செயற்படுவதானது ஊடக தர்மம் அல்ல. நீதியான நியாயமானபோராட்டங்ககளில்மக்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்கு குரல் கொடுப்பதும் அவற்றை வெளிக் கொணர்வதும் ஊடகங்களின் கடமையாகும். தமிழர்களின் தாயகம், தேசியம் நோக்கிய பயணத்தில் பங்களிப்பு செய்ய முடியாவிட்டாலும் ஒதுங்கியிருந்தால் அது மிகவும் நன்மையானவிடயமாகபார்க்கப்படும். தமிழ் மக்களின் உரிமைக்காகவும் அவர்களின் விடிவுக்காகவும் அளப்பரிய பங்காற்றி உயிர்நீத்த ஊடகவியலாளர்களுக்கு நாம் செய்யும் ஓர் அஞ்சலியாக கூட அது அமையும். பணத்துக்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் விலைபோகாமல் நடுநிலையாக நின்று ஊடக தர்மத்தை காக்க முன்வர வேண்டும் என்பதுடன் உயிர்நீத்த ஊடகவியலாளர்களுக்கு நாம் செய்யும் இறுதி மரியாதையாக அது அமையும் என்பதை உணர்ந்து கொண்டு செயற்படுவோமாக. ஊடகங்கள் அடக்கப்படுகின்ற மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் ஓர் கண்ணாடி.







**தாயகத்தான்**

# ஆசிய வல்லரசுகளின் காய் நகர்த்தல்களும் தமிழர்களின் பொத்துவில் – பொலிகண்டி போராட்டமும்

தமிழ் மக்கள் தமது தாயகம், சுயநிர்ணயம் கோரி பல கட்டங்களாக போராடி பல உயிரிழப்புகளையும் சொத்துக்களையும் சொல்லொன்னா துயரத்தையும் சந்தித்த நிலையில் இலங்கை பேரினவாத அரசுகளில் இருந்து இன்றுவரை எதுவித விடிவும் கிடைக்கவில்லை. அவர்களின் சுயஉரிமை தாயகம் என்பன கானல் நீராய் போனது தான் மிச்சம். தமிழர்களின் பலமான சக்தியாக விளங்கியதும் அவர்களின் இருப்பை பாதுகாப்பதாகவும் இருந்த விடுதலைப்புலிகள் அமைப்பானது 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் உலக வல்லரசுகளின் உதவியுடன் போராளிகள் அப்பாவி மக்கள் என இலட்சக்கணக்கானோர் அம் மண்ணில் புதைந்து போனதுடன் போராட்டமும் மௌனிக்கப்பட்டது. தமிழ் மக்களின் தாயகம் நோக்கிய பயணம் மீண்டும் தொடக்க புள்ளியில் வந்து நின்றது.

1975 களில் இருந்து 2009 வரை இருந்த தமிழ் மக்களின் தன்னார்வ எழுச்சிகள் அனைத்தும் முள்ளிவாய்க்கால் மண்ணில் மூடி புதைக்கப்பட்டது. அடிமைகளாகவும் சகிப்புத் தன்மையுடனும் இனிவேறு மார்க்கமும் இன்றியும் வழிநடத்தக்கூடிய தலைமையும் இல்லாமலும் ஓர் விரக்தியான இலக்கை நோக்கி தமிழினம் பயணிக்க தொடங்கியுள்ளது. தமிழர்களின் ஆயுத போராட்டத்தின் மௌனிப்புக்கு பின்னர் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தாம் தான் என்று விடுதலைப்புலிகளால் அடையாளம் காட்டப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல கட்சிகள் உருவாகி புலிகள் இல்லா வீட்டில் பூனைகளின் சதிராட்டம் போல ஆகிவிட்டது.

தமிழர்களின் நிலை தேசியம் சுயநிர்ணயம் என்பனவற்றுக்கு தாம் தான் காவலர்கள் என ஒரு தமிழ் கட்சியும் விடுதலைப்புலிகளின் தனிநாட்டு கொள்கையை முன்னெடுத்து செல்வது தாம் தான் என இன்னுமோர் தமிழ் கட்சியும் சலுகை அரசியல், முண்டுகொடுக்கும் அரசியல் என ஓர் அமைப்பும் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என ஓர் அமைப்பும் கிழக்கு மாகாணத்தில் விடிவெள்ளிகள் தாம் தான் என அங்கு அவலக்குரல் கொடுக்கும் ஓர் கட்சியும் மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் பிரச்சனையை தீர்க்க வக்கில்லாமல் வடகிழக்கு மக்களின் பிரச்சனையை தீர்க்க வந்துள்ளதாக பம்மாத்து கூறி நிற்கும் மலையகக்கட்சி ஒன்றும் என தமிழ் மக்களை ஏமாற்றி முட்டாளாக்கி அவர்களை தமது அரசியல் சுயலாபத்துக்காக பயன்படுத்த தொடங்கி விட்டார்கள். "சக்கடத்தார் ஏறி வந்து சறுக்கி விழுந்த குதிரையிலே தாங்களும் ஏறி சவாரி செய்ய முயலுகின்றார்கள்.

அடக்குமுறைகளை உடைத்து தமது தலைவிதியை தாமே தீர்மானிக்க தமிழ் மக்கள் தாங்களே தன்னார்வம் கொண்டு பல வெகுசன எழுச்சி போராட்டங்களை தாயக விடுதலை தேடி மேற்கொண்ட அகிம்சை ஆயுதப் போராட்டங்களில் ஒன்று 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்த இந்தியா இராணுவத்தின் ஒப்பந்தம் மீறி செயல்பாட்டுக்கு எதிராக தியாகி திலீபனின் 12 நாள் நீராகாரம் அருந்தாமல் உண்ணா நோன்பு இருந்து தியாக மரணம் அடைந்த பொழுது மக்கள் எழுச்சி ஒன்று தானாகவே உருவாகி வடகிழக்கு எங்கும் பிரகாசித்தது அது விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆளணி ரீதியாக பெரும் பலத்தை கொடுத்ததுடன் இந்தியாவில் முகமூடியை கிழித்து எறிந்த நிகழ்வாக பார்க்கப்பட்டது. எதுவித அரசியல் பின்புலமும் இன்றி இந்தியா இராணுவத்துக்கு எதிராக ஓர் மக்கள் புரட்சி அன்று வெடித்தது. அடுத்து விடுதலைப்புலிகளின் நோர்வே உடனான பேச்சு வார்த்தை இடம்பெற்ற காலகட்டத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் என தமிழ் மக்கள் தாமாகவே முன்வந்து எடுத்த போராட்டங்கள் இதன் பின்னர் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்டு சொல்லத்தக்க போராட்டமாக எல்லோராலும் கூறப்படும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் தற்பொழுது இருக்கும் கோட்டபாய அரசின் இராணுவ பௌத்த மேலாதிக்க சிந்தனையின் கொடூரத் தன்மையில் வெகுண்டெழுந்து போராட்டமாக பார்க்கப்படுகின்றது.

இப் போராட்டத்தின் முக்கிய அம்சங்கள் தமிழ் முஸ்லிம் மலையகம் என அனைத்து தமிழ் பேசும் மக்களின் அடக்கு முறைக்கு எதிரான போராட்டமாக பார்க்கப்பட்டது. இதனை ஒழுங்கமைத்து செயல்படுத்திய சமய தலைவர்கள் புலம்பெயர் அமைப்புகள் தமிழ் அரசியல் தலைமைகள் மற்றும் முஸ்லிம் அரசின் தலைமைகள் மலையக அரசியல் தலைமைகள் என அனைவரும் இணைந்ததுடன் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை போராட்டம் ஆரம்பமானது. எப்பொழுதும் போலவே இப் போராட்டத்தை தடுத்து நிறுத்தி அதனை அடக்கி ஒடுக்குவதற்கு அரசு தனது இராணுவ பொலிஸ் நீதிமன்றம் அத்துடன் கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் சட்டம் என அனைத்தையும் பிரயோகித்தது. ஆனால் போராட்டம் மிக எழுச்சியுடன் இடம்பெற்றது. ஒரு கட்டத்தில் அரசு தனது தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை சற்று தளர்த்தி பின்வாங்கியது. போராட்டம் பொலிகண்டி வரை வந்து முற்றும் பெற்றது. இப் போராட்டம் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்த பெ- ாழுது அப்போராட்டத்தில் மக்கள் எழுச்சி மிகக் குறைவாகவே காணப்பட்டது. முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் சிலர் மற்றும் முஸ்லிம் மக்களும் இணைந்து கொண்டனர். போராட்டமானது வட மாகாணத்துக்குள் நுழையும் பொழுது வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என நகரும் பொழுது கணிசமான மக்கள் போராட்டத்தில் இணைந்தன.

அத்துடன் தமிழ் அரசியல் தலைமைகளும் போராட்டத்தில் இணைந்தனர். இப் போராட்டம் பாரிய மக்கள் எழுச்சியாக மாற்றியமைக்க உண்மையில் தவறிவிட்டனர் ஏற்பாட்டாளர்கள். அதற்கு காரணமாக கொள்ளத்தக்க விடயம் யாதெனில் குறுகிய காலத்துக்குள் ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டம் அத்துடன் தமிழ் அரசியல் தலைமைகள் இப்போராட்டத்தில் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தாமல் தங்கள் தங்களின் எதிர்கால சுயநல அரசியலுக்காக தங்களை பிரதிநிதிப்படுத்த முயற்சித்தமை இப் போராட்டத்தில் பங்கு பற்றிய பல அரசியல் தலைமைகளில் சிலர் போராட்டத்தின் வீரியத்தன்மையை குறைக்கும் முகமாகவும் தங்களது எதிர்கால அரசியலை ஒழுங்கமைத்து செல்வதற்காகவும் போராட்ட நேரத்திலே சாணக்கியமாக செல்பி எடுத்ததுடன் தமது எழுச்சி கோசங்களை உடனடியாக பதிவேற்றி இணையத்தளங்கள் மீடியாக்களில் போட்டு போராட்டத்துக்கு மக்களை அழைப்பதாக கூறி மக்களை போராட்டத்திலிருந்து பின்வாங்க வைத்துவிட்டனர் என்பதே உண்மை. மக்களை தன்னார்வ எழுச்சி கொள்ள வைத்து அவர்களை முன்னிறுத்தி அரசியல் தமிழ் தலைமைகள் பின்னால் இருந்திருத்தால் இது ஓர் மிக எழுச்சியானது ஓர் தீர்க்கமான போராட்டமாக மாறி இருக்கும் இப் போராட்டத்தை முதலில் தடுத்து நிறுத்த முற்பட்ட அரச இயந்திரம் ஒரு கட்டத்தில் பின்வாங்கி தனது காலடியில் கிடக்கும் பச்சோந்தி தமிழ் அரசியல் தலைமைகளை



வைத்து இப் போராட்டத்துக்கு எதிரான பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டதுடன் தற்பொழுது அரசுடன் வியாபார நோக்க அரசியல் செய்யும் கிழக்கு மாகாண முஸ்லிம் உல்மாக்கள் மற்றும் சில தொப்பி பிரட்டி அரசியல் தலைமைகள் போராட்டத்தின் பின் விடுத்த அறிக்கைகள் முஸ்லிம் சமூகம் எப்பொழுதுமே ஓர் பச்சோந்திகளாகவே இருப்பார்கள் என்பதை கட்டியம் கூறி நிற்கின்றன. போராட்டம் முடிவுற்ற உடனேயே பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்கள் முஸ்லிம் மக்களின் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் ஜனாசாக்களை அடக்கம் செய்ய முடியும் என அறிவித்த சில நொடிகளில் முஸ்லிம் மக்களின் தேசியத் தலைவர் எனக் கோசமிடும் றிசாட் பதியூதின் அவர்கள் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க தயார் என அறிக்கை விட்டார். பிரதமர் கொடுத்த ஜனாசா அடக்க வாக்குறுதியை நம்பி றிசாட் அவர்கள் இத் தீர்மானத்தை எடுத்தார். ஆனால் பிரதமரின் வாக்குறுதி செல்லா காசாக மாறியதுடன் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகி போனது.

முஸ்லிம் மக்களின் ஜனாசா விவகாரம் றிசாட் அவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். உங்களது சமய கோட்பாட்டை வலியுறுத்திதான் தமிழ் மக்கள் தாமாக முன் வந்து போராட முற்பட்ட நிலையில் அப் போராட்டத்தில் தமிழ் மக்களின் நியாயமான பல கோரிக்கைகளும் மலையக மக்களின் சம்பள பிரச்சனை கோரிக்கையும் இடம்பெற்ற நிலையில் பிரதமரின் ஜனாசா அடக்கத்துக்கான அனுமதி வந்தவுடன் உங்களின் சுயநல அரசியல் தெட்ட தெளிவாக விளங்கிவிட்டது. உங்களது நிபந்தனையற்ற ஆதரவு என்ற அறிவிப்பு இதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. அத்துடன் இப்போராட்டம் முடிவுற்றதும் அடுத்த சில தினங்களில் கிழக்கு மாகாண பள்ளிவாசல்களால் விடப்பட்ட அறிக்கையானது விசமந்தமானதும் முஸ்லிம்கள் எப்பொழுது பச்சோந்திகள் என்பதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் தலைமைகளும் தங்கள் கட்சி சார் பிரதிநிதிப்படுத்தவும் தங்களை ஒரு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் காட்ட பல திருவிளையாடல்களை இப்போராட்டத்தில் மேற்கொண்டுள்ளனர். இப்போராட்டத்தின் பின்புலத்தில் இந்திய ஏகாதிபத்தியமும் இருந்துள்ளது. எவ்வாறெனில் இலங்கை அரசின் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு கொடுக்க மறுத்த விடயத்திலும் சீனாவுடன் உள்ள மிகப்பெரும் நட்புறவு என்பன இந்தியாவுக்கு மிகப்பெரும் அதிர்ப்தியை ஏற்படுத்தி இருந்த நிலையில் இலங்கையை தனது காலடியில் வைத்திருக்கவும் இலங்கை அரசுக்கு ஓர் அச்சுறுத்தலை வழங்கவும் தன்னிடம் காலகாலமாக இவ்வாறான நிலைகளில் பாவிக்கும் துரும்பு சிட்டான வடகிழக்கு தமிழ் மக்களை தூண்டி விட்டு போராட்டத்தை தொடக்கி விட்டு ஒருபடி மேல் சென்று இப் போராட்டத்தில் முஸ்லிம் மக்களையும் இணைத்துவிட்டு ஓர் அழுத்தத்தை இலங்கை அரசுக்கு கொடுக்க முயற்சித்தல் போல் தெரிகின்றது.

இலங்கை எப்பொழுதும் தனது கையை விட்டுவிலகிப்போகும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்தியா வடகிழக்கு தமிழர்களை உணர்ச்சி பொங்க எழச்செய்து தனது சுயநல பிராந்திய நலனை அடைய முயற்சித்துள்ளது என்பது கடந்த கால வரலாறுகள். எனவே இப் போராட்டத்தையும் தனது சுயநல பிராந்திய நலனுக்கு பாவித்துள்ளது என அறியமுடிகின்றது. 1987 ஆம் ஆண்டு தியாகி திலீபனின் உண்ணா நோன்பு போராட்டத்தில் எழுந்த மக்கள் புரட்சியானது எவ்வித அரசியல் வல்லரசுகளின் சுயநல பிராந்திய நலன் என ஒன்றும் பின்னால் நின்றதில்லை.

ஆகவே அவ் மக்கள் புரட்சியானது மிகப்பெரும் பலம் கொண்டு எழுச்சி பெற்று வீறுநடை போட்டது. ஆனால் இப்பொழுது தமிழ் மக்களின் அகிம்சை போராட்டங்களில் தமிழ் அரசியல்வாதிகளின் சுயநல அரசியல் தன்மை மற்றும் ஆசிய வல்லரசுகளின் சுயநல பிராந்திய கொள்கைகள் என்பன பின்புலத்தில் காணப்படுகின்றன.

எனவே தமிழ் தலைமைகளோ சமய தலைமைகளோ சமூக ஆர்வலர்களோ புலம்பெயர் அமைப்புகளோ தமிழக ஈழ உணர்வாளர்களோ தமிழ் மக்கள் தன்னார்வ எழுச்சி கொண்டு இவ் பேரினவாத அரசுக்கெதிரான போராட்டங்களை மேற்கொள்ள நீங்கள் முயற்சிக்க வேண்டும். தமிழ் மக்கள் தன்னெழுச்சியுடன் அகிம்சை ரீதியாக போராட தயாராக உள்ளனர் என்பது பொத்துவில் பொலிகண்டி போராட்டத்தின் ஊடாக தெரியவருகின்றது. ஆனால் உங்களது அரசியல் பித்தலாட்டம் காரணமாக சலிப்புற்று மிகப்பெரும் எழுச்சியாக மாற வேண்டிய போராட்டம் மந்தகதியில் முடிவடைந்துள்ளது.

ஆகவே இதனை புரிந்து கொண்டு மக்கள் மயப்படுத்தபட்ட போராட்டம் ஊடாகவே தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் ஓர் அழுத்தத்தை உலக நாடுகளுக்கு பிரயோகிக்க முடியும் என்பதுடன் கட்சி சுயநல அரசியல் பேதங்கள் எல்லாம் களைந்து விட்டு ஓர் ,லக்குடன் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற தமிழ் மக்களை தன்னார்வ எழுச்சி போராட்டங்களை நடாத்தி அவர்களுக்கு பக்க பலமாக இருந்து செயல்பட அழைத்து நிற்கின்றது தமிழினம்.

தாயகத்தான்

# பூகோள அரசியலுக்குள் சிக்குண்டுள்ள இலங்கைத் தீவின் அரசியல்

மேற்குலகுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் தொடர்ந்த முரண்பட்ட நிலை. மேற்குலக நலனை இலங்கைத் தீவிலும் இந்து சமுத்திர பிராந்தியத்திலும் நிலைநிறுத்துவதற்கு மஹிந்த ராஜபக்ஷ பொருத்தமானவராக இல்லை என்ற மேற்குலகின் முடிவுக்கு வித்திட்டது. அதே வேளை. மஹிந்தவின் வெளியுறவுக் கொள்கை இந்தியாவுக்கும் கசப்பானதாகவே இருந்தது. தத்தமது தேசிய நலன்கள் தொடர்பாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் போட்டி நிலவினாலும். மஹிந்த ராஜபக்ஷ கடைப்பிடித்த சீனசார்பு கொள்கை அமெரிக்காவை முதன்மையாகக் கொண்ட மேற்குலகுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒரு பொதுப்புள்ளியை உருவாக்கியது. அந்தப் பொதுப்புள்ளி இலங்கைத் தீவில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு காரணமானது என்பது மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரின் ஒரு வாதம்.

1972 இற்குப் பிற்பாடு இலங்கையில் ஆட்சிக்கு வந்த அனைத்து அரசுகளும் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு கங்கணம்கட்டி நின்றன. இந்து சமுத்திரத்தை மையப்படுத்திய பூகோள அரசியலை தமக்குச் சாதகமாக மாற்ற எண்ணிய உலகின் சக்திமிக்க பல்வேறு நாடுகளுக்கும். தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சித்தாந்தத்தின் மீது கொண்டிருந்த உறுதிப்பாடு ஒருவித முட்டுக்கட்டையாக காணப்பட்டது. ஆதலால். குறித்த இந்த நாடுகளும் இலங்கையின் இரண்டு அரசுகளும் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கின. ரணில் அரசில் ஆரம்பமான இந்த நடவடிக்கை ராஜபக்ஷ அரசில் முடிவுக்கு வந்தது. சுமார் ஆறு ஆண்டு தொடரப்பட்ட மறைமுகமானதும் வெளிப்படையானதுமான நடவடிக்கைகளின் இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் நான்காம் ஈழப்போரில் இராணுவரீதியாக தோற்கடிக்கப்பட்டார்கள். இதனைத்தான் இருபது நாடுகளின் ஆதரவுடன் விடுதலைப் புலிகளை தோற்கடித்தோம் என அன்றைய வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோஹித போகொல்லாகம இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவோடு கூட்டும் சேரும் போதே. மஹிந்த ராஜபக்ஷ நீண்டகாலத்தில் தமது கொள்கைகளோடு இணங்கிப் போகக் கூடிய நபர் இல்லையென்பதை குறித்த சக்திமிக்க நாடுகள் தெரிந்தே வைத்திருந்தன. ஆனால். முதலில் விடுதலைப் புலிகளை அழிப்போம். பின்னர் மஹிந்த ராஜபக்ஷவை கவனிப்போம் என்ற போக்கு அப்போது நிலவியதாக ஆய்வுகள் தெரிவிக்கிறது. ஆனால். போரில் வென்ற பின் ராஜபக்ஷக்கள் புதிய பலத்துடன் வியாபித்தனர். ஆதலால். 2010 ஜனவரி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியவில்லை. அதன் பிற்பாடு. மேலும் பலமடைந்த மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்க முடியாத ஒரு இரும்பு மனிதராகவே தோற்றமளித்தார். ஆயினும். ராஜபக்ஷவை வீழ்த்துவதற்காக பல்வேறு தரப்புகளையும் இணைத்து. உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக சுமார் ஐந்து ஆண்டுகள் பலசுற்று வேலைத் திட்டங்கள் இடம்பெற்றன. இலங்கைத் தீவிலிருந்த இனக்குழுமங்கள். மதக் குழுக்கள். அரசியல் கட்சிகள். சிவில் அமைப்புகள். ஊடக அமைப்புகள். அரச சார்பற்ற அமைப்புகள் மத்தியில் ராஜபக்ஷவுக்கு எதிராக நிலவிய அனைத்து வகையான உணர்வுகள். செயற்பாடுகள் இனங்காணப்பட்டு. ஆய்வு செய்யப்பட்டு. கரணம் தப்பினால் மரணம் என்ற அடிப்படையில் திட்டங்கள் மிக நுணுக்கமாக தீட்டப்பட்டன. அந்த கூட்டு செயற்பாட்டின் விளைவே இவ்வருடம் ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிப்கப்பட்டார். ஆனால். சுமார் ஐந்து வருடகால செயற்திட்டங்களின் ஊடாக தோற்கடிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ வெறும் ஐந்தே மாதங்கள் கழிந்த நிலையில் மீண்டும் அச்சுறுத்துபவராக எழுச்சி பெற்றுள்ளார்.


இது எந்தளவிற்கு நிலைக்கும் என்பதற்கு அப்பால். மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்காக உருவாக்கப்பட்டவரே மஹிந்த ராஜபக்ஷவின் மீள்வருகைக்கான வெளித்தெரியும் பிரதான காரணியாக விளங்குகிறார். நல்லாட்சி. ஜனநாயகத்தை மீள்நிலைப்படுத்தல். சட்டத்தின் ஆட்சி போன்றவற்றின் நடுநாயகமாக சோடிக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேன. சர்வதிகாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தியவரை மீண்டும் அரசியலில் பிரவேசிக்க உடந்தையாக இருக்கிறார் என்ற ஆவேச அலை தென்னிலங்கையில் பீறிட்டு பாய்கையில் மேற்குலக சமூகம் மைத்திரி தொடர்பாக ஏமாற்றமடைந்துள்ளது.

மைத்திரி தனக்கு துரோகமிழைத்ததாக முன்னர் ராஜபக்ஷ கருதினார். ராஜபக்ஷவின் மீள் அரசியல் பிரவேசத்தை கட்டுப்படுத்த முடியாததால். ஜனவரி 8 நிகழ்த்தப்பட்ட புரட்சிக்கும் புரட்சியாளர்களுக்கும் மைத்திரி துரோகமிழைத்து விட்டதாக தற்போது ஆட்சிமாற்றத்திற்கு பின்னின்ற தீவிர 'இலங்கையர்கள்' கருதுகிறார்கள். நாற்பத்தொன்பது வருடகால சுதந்திரக் கட்சியின் வரலாற்றை கொண்டிருந்தாலும். படி நிலை வளர்ச்சியூடாக ஜனாதிபதியானவரல்ல மைத்திரி. மாறாக குறுகிய காலத்துக்குள் பெரும் பிம்பங்களாலும். மாயைகளாலும் உருவாக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டவர். அந்த அலங்கரிப்புக்குப் பின்னால் சக்திமிக்க நாடுகளின் பூகோள அரசியல் சார்ந்த நலன் உள்ளது. ஆதலால் தான். இந்தியப் பிரதமர் மோடி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகி இரு மாதங்களிலேயே இலங்கைத் தீவுக்கு வருகை தந்தார். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியான பின். முதன் முதலாக வாழ்த்துச் சொல்லி மலர்ச்செண்டை கொழும்பிலுள்ள இந்தியாவுக்கான தூதுவர் வழங்கினார்.

கடந்த மே மாதத்தின் முதல் வாரத்தில் அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் இலங்கைத் தீவுக்கு வந்திருந்தார். அத்துடன். அமெரிக்காவின் பல இராஜதந்திரிகளும் இலங்கைத் தீவுக்கு படையெடுத்திருந்தனர். இந்தப் பயணங்களின் நிறைவிலெல்லாம் இலங்கையின் புதிய அரசுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பாராட்டுதல்களும் புகழாரமும் எல்லையற்று விரிந்தது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவுக்குப் பயணம் செய்த போது விமரிசையான வரவேற்பு அளிக்கப்பட்டு. இலங்கைத் தீவு தென்னாசியாவின் தேர்தல் ஜனநாயகத்துக்கு எடுத்துக்காட்டாக பேசப்பட்டது. மைத்திரி - ரணில் அரசுக்கு நெருக்கடியும் அசௌகரியமும் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே. கடந்த மார்ச் மாதம் மனித உரிமைகள் பேரவையில் வெளிவரவிருந்த அறிக்கை செப்டெம்பர் மாதம் வரைக்கும் பிற்போடப்பட்டது.

இத்தனை வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்ட பின்னும். மைத்திரிபால சிறிசேனவால் ராஜபக்ஷவின் மீள் அரசியல் பிரவேசத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

ஜனவரி 8 தேர்தல் முடிவும் சரி. மிக அண்மைக் காலமாக தென்னிலங்கையில் அரங்கேறிவரும் அரசியல் நகர்வுகளும் சரி எதிர்பாராததாகவும் நடந்து முடியும் வரை நம்பமுடியாததுமாகவே உள்ளது. இது ஒருபுறம் மேற்குலகுக்கு அதிர்ச்சி. ஏமாற்றம். கோபத்தை உண்டுபண்ணுகிறது. மறுபுறம். இலங்கைத் தீவு தொடர்பான மேற்குலகின் கணிப்பீடுகளும் திட்டமிடல்களும் மீண்டும் ஒரு தடவை தவறாகிப் போயுள்ளதா என்ற கேள்வியை ஏற்படுத்துகிறது. தேசிய நலன்களைத் தவிர அரசியலில் நிலையான தென்று எதுவுமில்லை. ஆனால். குறித்த நாடுகள் தமது தேசிய




நலன்களை பூர்த்தி செய்வதற்காக சுமார் ஐந்து வருடங்களாக மேற்கொண்ட ஒரு செயற்றிட்டம் வெறும் ஐந்து மாதத்தில் ஆபத்தை எதிர்கொண்டிருப்பது ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியது.

அன்று தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு எந்த சக்திமிக்க நாடுகளால் மஹிந்த ராஜபக்ஷ பலப்படுத்தப்பட்டாரோ. அந்த சக்திமிக்க நாடுகளுக்கு சவால் விடுபவராக மஹிந்த ராஜபக்ஷ இன்று மாறியுள்ளார். வெளியகத்தால் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட பலம். அவரை உள்ளகத்தில் ஒரு போரியல் நாயகனாக. வரலாற்று சாதனையாளனாக மாற்றியது. இன்று அந்த பலம் சார்ந்த பிம்பமே மேற்குலகுக்கும் மிரளாத வல்லமையை அவருக்கு வழங்கியுள்ளது. ராஜபக்ஷவுக்கான வெளியக ஆதரவில் முதன்மையானதான சீனாவின் ஆதரவென்பது நிலையானதல்ல. ஏனெனில். ஆட்சிக்கு வரும் எந்த அரசும் மஹிந்த ராஜபக்ஷ அரசு போன்று தம்மோடு இணங்கிச் செயற்பட முன் வந்தால். அவர்களுடன் கூட்டுவைக்க சீனா தயங்காது.

இத்தருணத்தில் மற்றுமொரு முக்கியமான விடயமும் கவனிக்க வேண்டும். அது யாதெனில். அமெரிக்காவுக்கும் தமக்கும் சீனா பொது சவால் என்ற காரணத்திற்காக. அமெரிக்கா இலங்கைத் தீவில் ஆழமாக காலூன்றுவதை இந்தியா விரும்பப் போவதில்லை. ஏனெனில். இலங்கைத் தீவில் அமெரிக்கா ஆழமாக காலூன்றுவதென்பது. அமெரிக்காவின் மேலாண்மையை இந்து சமுத்திரத்தில் பலப்படுத்தும். அது. இந்தியாவின் தேசிய நலனுக்கு நீண்டகால நோக்கில் சவால்விடக்கூடிய சாத்தியம் உண்டு. இந்த நீண்டகால திட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கைத் தீவை மையப்படுத்தி இந்து சமுத்திரத்தில் தனது மேலாண்மையை நிலைநாட்டும் நகர்வை 1970களின் இறுதிப்பகுதியில் அமெரிக்கா எடுத்த போது இலங்கை அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முகமாக. தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் இந்தியா வழங்கியது. இதனூடாக அன்றைய ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசுக்கு அழுத்தத்தை கொடுத்தது. அணிசேரா நாடுகளின் கூட்டம் 1981 டெல்லியில் இடம்பெற்றபோது டீக்கோ கார்சியா (Diego Garcia) தீவில் அமைந்துள்ள அமெரிக்காவின் கடற்படை மற்றும் இராணுவத் தளங்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்ற தீர்மானத்தை இந்தியா கொண்டுவர முற்பட்டது. ஆனால். அதனை அமெரிக்காவுக்கு சார்பான முறையில் இலங்கை அரசு மாற்றியமைத்தது. இது பின்னர் இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தக்கூடிய இந்தியாவின் நகர்வுகளுக்கு வழிவிட்டது. 2002 ரணில் அரசு இருந்தபோது சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அமெரிக்காவின் அக்சா (Acquisition and Cross-Servicing Agreement – ACSA) உடன்படிக்கையில் இலங்கையும் அமெரிக்காவும் கைச்சாத்திட முனைந்தன.

ஆயினும். இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாக இது கைவிடப்பட்டதாக செய்திகள் வெளிவந்திருந்தன. ஆயினும். இந்த உடன்படிக்கை பின்னர் 2007ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. அமெரிக்காவோடு இந்தியாவுக்கு சில பொதுப்புள்ளிகள் இருப்பினும். அமெரிக்காவின் மேலாண்மையை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரிப்பதற்கு துணைபோகக் கூடிய ஆட்சிகள் தமது அண்டை நாடுகளில் பலமாக இருப்பதை இந்தியா விரும்பாது. இத்தகைய ஒரு வரலாற்றுப் பின்புலத்திலேயே. எதிர்பாராத மாற்றங்கள் இலங்கைத் தீவின் அரசியலில் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக ராஜபக்ஷவின் எதிர்பாராத மீள் அரசியல் பிரவேசம் என்பது மேற்குலகுக்கு குழப்பகரமானதொன்றே.

இந்த எதிர்பாராத நிகழ்வு மட்டுமன்றி. இதனோடு தொடர்புபட்ட கடந்த மூன்று தசாப்தகால அரசியல் விருத்திகளும். இலங்கைத் தீவு தொடர்பான மேற்குலக சமூகத்தின் கொள்கைகள் மீள்பரீசீலனைக்கு உட்படுத்த வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன. ஏனெனில். இது ஒரு கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையோ. தனித்து ஒரு நாட்டின் பிரச்சினையோ அல்ல. மாறாக இது ஒரு தேசத்தின் இருப்புக்கும். ஒரு தேசத்தின் இருப்பை. எதிர்காலத்தை மறுக்கும் இன்னுமொரு தேசத்துக்குமிடையிலான இனக்குழும மோதுகையாக ஆரம்பித்து. பிராந்திய தலையீட்டை எதிர்கொண்டு. பூகோள அரசியலால் சர்வதேசமயப் படுத்துள்ளப்பட்டுள்ள பிரச்சினை. இத்தகைய பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டுமெனில். இவற்றிற்கெல்லாம் மூலவேராக இருக்கின்ற இனக்குழும மோதுகைக்கு நியாயமான முறையில் தீர்வு காணப்பட வேண்டும். அந்த மாற்றம் உருவாகும் வரை. எந்த மாற்றமும் நிலையானதாக இருக்காது. பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டுமெனில். இவற்றிற்கெல்லாம் மூலவேராக இருக்கின்ற இனக்குழும மோதுகைக்கு நியாயமான முறையில் தீர்வு காணப்பட வேண்டும். அந்த மாற்றம் உருவாகும் வரை. எந்த மாற்றமும் நிலையானதாக இருக்காது.

சீனாவின் பிடியில் இலங்கை ஜனாதிபதி தேர்தலில் கோட்டபாய ராஜபக்சவின் வெற்றி குறித்து பார்க்கும் பொழுது மிகப்பெரும் வாக்கு வித்தியாசத்தில் இலங்கை ஜனாதிபதி தேர்தலில் கோட்டபாய ராஜபக்ச வெற்றி பெற்றிருப்பது முற்றிலும் எதிர்பாராதது என்று சொல்லிவிட முடியாது. அனைத்து மக்களின் உணர்வுகளையும் பாதுகாப்போம் என்று ஜனாதிபதி கோட்டபாயராஜபக்ச தெரிவித்ததைப்போல அவரால் நடந்துகொள்ள முடியாது.

//ஆம் பக்கம் பார்க்க...

**நிர்மானுசன் பாலசுந்தரம்**



# பிராந்தியச் செய்திகள்



## 2019 க.பொ.த (சா/த) பரீட்சை: மீள் திருத்த முடிவுகள் வெளியாகியுள்ளன

கடந்த 2019ஆம் ஆண்டு க.பொ.த.சா/த பரீட்சை பெறுபேறுகளின் மீள் திருத்த முடிவுகள் அன்று(18) வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி மொத்தம் 57,155 மாணவர்கள் மீள் திருத்தத்துக்காக விண்ணப்பிருந்ததாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான www.doenets.lk க்குச் சென்று பரீட்சை சுட்டெண்ணை உள்ளிடுவதன் மூலம் பெறு பேறுகளை அறியலாம்.

இந்த விவகாரம் தொடர்பான ஏதேனும் கேள்விகளுக்கு பாடசாலை பரீட்சைகள் நிறுவனங்கள் மற்றும் பெறுபேறுகள் கிளையுடன் 0112784537, 0112784208, 0113188350, 0113140314 எனும் எண்களில் அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 58 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பயிற்சி நிறைவில் நிரந்தர நியமனம்!

தற்போதைய அரசாங்கம் 58 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கியுள்ளது என அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாவது கட்டமாக 50 ஆயிரம் பேருக்கும், இரண்டாவது கட்டமாக 8000 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அவர்கள் ஒரு வருட கால பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பயிற்சிக்காலத்தில் ரூபாய் 20,000 கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சி காலம் நிறைவடைந்ததும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.



## யாழ். வைத்தியசாலை வீதியால் வெளிமாவட்டப் பேருந்துகள் செல்லத் தடை!

வெளிமாவட்டங்களில் இருந்து வந்துசெல்லும் பேருந்துகள் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியால் உள் நுழைவது மற்றும் வெளிச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அனுப்பியுள்ள செய்தி குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த செய்தியில், 'வெளி மாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் நேராக புதிதாக அமைக்கப்பட்ட நெடுந்தூர பேருந்துத் தரிப்பிடத்திற்குச் செல்ல வேண்டும்.

புதிய பேருந்துத் தரிப்பிடத்தை, இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியார் பேருந்து உரிமையாளர்களும் பயன்படுத்த மறுத்துவரும் நிலையில் யாழ். மாநகர சபையால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த முடிவு குறித்து, யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இதனை மீறுபவர்கள் மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பேருந்துகள் வைத்தியசாலை வீதியைப் பயன்படுத்துவது தடை செய்யப்படும் பட்சத்தில் யாழ். நகரின் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறைவடையும். எனவே, அனைவரதும் ஒத்துழைப்பை இதுதொடர்பாக வேண்டி நிற்கிறோம்' என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பருத்தித்துறையில் மோட்டார் சைக்கிள் கடலில் வீழ்ந்து ஒருவர் பலி

பருத்தித்துறை திக்கம் சந்திக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், வண்டி ஓட்டுனர் கட்டுப்பாட்டை இழந்து, கடலுக்குள் விழுந்ததில் உயிரிழந்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் கற்கோவளத்தைச் சேர்ந்த பவிதரன் (30 வயது) என்பவரே உயிரிழந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த சம்பவம் இடம்பெற்ற வீதியூடாகப் பயணித்தவர்கள் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## 10 ஆயிரம் கிலோ கழிவுத் தேயிலையைக் கொண்டு சென்ற இருவர் கைது

கம்பளை வெல்லம்படவிலிருந்து கொழும்புக்கு 10 ஆயிரம் கிலோ கழிவுத் தேயிலையைக் கொண்டு செல்லும்போது இரண்டு சந்தேக நபர்களை பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கழிவுத் தேயிலை மற்றும் சந்தேக நபர்களுக்குச் சொந்தமான இரண்டு லொறிகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் யக்கல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தேயிலையின் தரம் குறித்து சான்றிதழ் வழங்குமாறு இலங்கை தேயிலை சபைக்கு பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கம்பஹா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.






## ஷங்கர் படத்தில் ஹீரோயினாக நடிக்கும் ராஷ்மிகா?

தமிழ், தெலுங்கு, இந்தி என பல்வேறு மொழி படங்களில் பிசியான நடிகையாக வலம்வரும் ராஷ்மிகா, அடுத்ததாக ஷங்கர் இயக்கும் படத்தில் நடிக்க உள்ளாராம்.

கர்நாடகாவை சேர்ந்த ராஷ்மிகா மந்தனா கன்னட படமான 'கிரிக்பார்ட்டி' மூலம் திரையுலகில் நடிகையாக அறிமுகமானார். அவர் தெலுங்கில் விஜய் தேவரகொண்டாவுக்கு ஜோடியாக நடித்த கீதா கோவிந்தம், டியர் காம்ரேட் ஆகிய படங்கள் நல்ல வரவேற்பை பெற்றன. இப்படங்கள் தமிழிலும் வெளியாகி வரவேற்பை பெற்றன.

தமிழில் இவர் நடித்துள்ள முதல் படம் சுல்தான். இப்படம் வருகிற ஏப்ரல் மாதம் ரிலீசாக உள்ளது. இது தவிர இரண்டு பாலிவுட் படங்களிலும் நடித்து வருகிறார் ராஷ்மிகா.

இவ்வாறு தமிழ், தெலுங்கு, இந்தி என பல்வேறு மொழி படங்களில் பிசியாக நடித்து வரும் ராஷ்மிகாவுக்கு, ஒரு பிரம்மாண்ட பட வாய்ப்பு தேடி வந்துள்ளதாம். ஷங்கர் இயக்கத்தில் ராம்சரண் நடிக்க உள்ள புதிய படத்தில் ராஷ்மிகா தான் ஹீரோயினாக நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.



## முதன் முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கும் ஹிப்ஹாப் ஆதி?

பிரபல இசையமைப்பாளரும், நடிகருமான ஹிப்ஹாப் ஆதி, அடுத்ததாக நடிக்கும் படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறாராம்.

இசை அமைப்பாளர், நடிகர், இயக்குனர் என பன்முகத்திறமை கொண்டவர் ஹிப்ஹாப் ஆதி. இவர் தற்போது நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில் இவர் அடுத்ததாக நடிக்கும் படம் 'அன்பறிவு'. இப்படத்தை அஸ்வின் ராம் இயக்குகிறார். ஹீரோயினாக காஷ்மிரா பர்தேசி நடிக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தில் நடிகர் ஹிப்ஹாப் ஆதி இரட்டை வேடத்தில் நடிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு பொள்ளாச்சியில் நடைபெற்று வருகிறது. இன்னும் 10 நாட்களில் முழு படப்பிடிப்பும் முடிவுக்கு வரும் என கூறப்படுகிறது.

அஜித்தின் விவேகம், விஸ்வாசம் போன்ற படங்களை தயாரித்த சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. மாதேஷ் மாணிக்கம் ஒளிப்பதிவு செய்யும் இப்படத்திற்கு பிரதீப் ராகவ் எடிட்டிங் செய்கிறார்.



## ராஜ வம்சம் படத்தின் ரிலீஸ் திகதி அறிவிப்பு



கதிர்வேலு இயக்கத்தில் சசிகுமார், நிக்கி கல்ராணி நடிப்பில் உருவாகி இருக்கும் ராஜ வம்சம் படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

செந்தூர் பிலிம் இன்டர்நேஷனல் சார்பில் டிடி.ராஜா தயாரித்துள்ள 'ராஜ வம்சம்' படத்தை அறிமுக இயக்குனர் கதிர்வேலு இயக்கியுள்ளார். இந்தப்படத்தில் கதாநாயகனாக இயக்குனர், நடிகர் சசிகுமார் நடிக்க இவருக்கு ஜோடியாக நிக்கி கல்ராணி நடித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் ஒரு அறிமுக இயக்குனர் 49 நடிகர்களை வைத்து படம் இயக்கியுள்ளது இதுவே முதன் முறை. இயக்குனர் கதிர்வேலு, நட்சத்திர பட்டாளங்களுடன் ஜனரஞ்சகமான படங்களை இயக்குவதில் புகழ்பெற்ற இயக்குனர் சுந்தர் சி.யிடம் உதவி இயக்குனராக பயிற்சி பெற்றவர்.

இந்த படத்தில் ராதா ரவி, தம்பி ராமைய்யா, விஜய குமார், சதிஷ், மனோபாலா ரமேஷ் கண்ணா, சிங்கம் புலி, யோகி பாபு, கும்கி அஸ்வின், ஆடம்ஸ், சரவணா சக்தி மணி சிலம்பம் சேதுபதி, ரமணி, ராஜ் கபூர், தாஸ், நமோ நாராயணன், சுந்தர், சாம்ஸ், சமர், ரேகா, சுமித்ரா, நிரோஷா, சந்தான லட்சுமி, சசிகலா, யமுனா, மணி சந்தனா, மணி மேகலை, மீரா, லாவண்யா, ரஞ்சனா, ரஞ்சிதா, ரம்யா, தீபா என 49 கலைஞர்கள் நடித்துள்ளனர். செந்தூர் பிலிம்ஸ் சார்பில் ராஜா தயாரித்துள்ள இப்படம் மார்ச் 12 ஆம் திகதி திரைக்கு வருகிறது.

## 'பாபநாசம் 2' உருவாகுமா? – இயக்குனர் ஜீத்து ஜோசப் விளக்கம்

திரிஷ்யம் 2 வெளியாகி உள்ள நிலையில், தமிழில் பாபநாசம் 2 உருவாகுமா? என்பது குறித்து அப்படத்தின் இயக்குனர் ஜீத்து ஜோசப் விளக்கம் அளித்துள்ளார். ஜீத்து ஜோசப் இயக்கத்தில் மோகன்லால்-மீனா ஜோடியாக நடித்து திரைக்கு வந்த 'திரிஷ்யம்' படம் வசூல் சாதனை நிகழ்த்தியது. இந்த படம் தமிழில் கமல்ஹாசன்-கவுதமி நடிக்க பாபநாசம் என்ற பெயரில் ரீமேக் ஆனது. இரண்டு பெண் குழந்தைகளின் தந்தையாக கமல்ஹாசன் நடித்து இருந்தார். பாபநாசம் படத்துக்கும் ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பு கிடைத்தது.

தற்போது மோகன்லால் நடிப்பில் திரிஷ்யம் 2 படம் வெளியாகி உள்ளது. ஆதலால் தமிழிலும் பாபநாசம் 2 வெளியாகுமா? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே நிலவி வந்தது. மேலும் அதில் கமல் நடிப்பாரா? என்ற கேள்வியும் எழுந்தது.

இந்நிலையில் இது குறித்து பேட்டி ஒன்றில் பதில் அளித்துள்ளார் இயக்குனர் ஜீத்து ஜோசப். அதில் அவர் கூறியதாவது: 'கமல் அனுமதி கிடைத்தால் பாபநாசம் 2 படத்தை இயக்க தான் தயாராக இருக்கிறேன். கமலின் முடிவை பொறுத்தே 'பாபநாசம் 2' படம் உருவாகுமா? இல்லையா? என்பதை சொல்ல முடியும்' என அவர் கூறியுள்ளார்.



தொகுப்பு :– ஹாசினி




# உதடுகளில் உள்ள கருமையை நீக்க குறிப்புகள்!

உதடுகளும் ஒருவரின் அழகை வெளிக்காட்டும். அதனால் தான் பெண்கள் அழகை அதிகரித்துக் காட்ட மேக்கப் போடும் போது உதடுகளுக்கு லிப்ஸ்டிக்குகளைப் போடுகிறார்கள். ஆனால் உதடுகளின் அழகை இயற்கையாகவே அதிகரிக்கலாம்.



பலருக்கு உதடுகள் மென்மையின்றி, தோலுரிந்து, கருப்பாக இருக்கும். இப்படி உதடுகளின் அழகு பாழாவதற்கு அளவுக்கு அதிகமான சூரியக்கதிர்களின் தாக்கம், காஃபைன், புகைப்பிடித்தல் போன்ற பல விஷயங்கள் காரணங்களாக உள்ளன. இங்கு உதடுகளில் உள்ள கருமையைப் போக்கி, உதடுகளை அழகாக வைத்துக் கொள்ள அற்புத வழிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

**எலுமிச்சை சாற்றில் சர்க்கரையை சேர்த்து (எலுமிச்சை சாறு - 1 கப் சர்க்கரை - சிறிது), சர்க்கரை கரைவதற்குள், அதனை உதடுகளில் தடவி மென்மையாக ஸ்கரப் செய்து, 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இந்த செயலை தினமும் இரவில் படுக்கும் முன் செய்து வந்தால், 5-6 நாட்களிலேயே உதடுகளில் உள்ள கருமை நீங்கி, உதடுகள் மென்மையாகவும், அழகாகவும் இருப்பதைக் காணலாம்.**

**கற்றாழையின் ஜெல்லை இரவில் படுக்கும் முன் உதடுகளில் தடவி, இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், கருமை நீங்கி, உதடுகளின் அழகு அதிகரிக்கும்.**

**பீட்ரூட்டை துண்டுகளாக்கி ஃப்ரிட்ஜில் வைத்து, பின் குளிர்ச்சியான அந்த பீட்ரூட் துண்டுகளைக் கொண்டு உதடுகளை 2 நிமிடங்கள் மசாஜ் செய்து, 15-20 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்தாலும், உதடுகளில் உள்ள கருமை அகலும்**

# கைகளின் வறட்சியை போக்க சில அற்புத வழிகள் !!

சிலருக்கு கைகளில் உள்ள இயற்கை எண்ணெய்கள் வறட்சியடைந்து, கைகள் சொறிப் பிடித்தது போன்று காணப்படும். இதற்கு கிரீம்களை விட இயற்கை முறையின் மூலம் எளிதில் நீக்க முடியும்.



ஆலிவ் ஆயிலை தினமும் இரவில் படுக்கும் போது கை, கால்களுக்கு தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து வந்தால், சருமத்திற்கு வேண்டிய ஈரப்பசை கிடைத்து, கை, கால்களில் உள்ள வறட்சி நீங்கும்.

மில்க் க்ரீம் ஓர் சிறந்த மாய்ஸ்சுரைசர். மில்க் க்ரீம் கொண்டு தினமும் மசாஜ் செய்து வாருங்கள். இது சருமத்தில் உள்ள இறந்த செல்களை வெளியேற்றி, புதிய சரும செல்கள் உருவாக வழிவகுக்கும்.

குளிர்காலத்தில் தயிரை தினமும் கை, கால்களுக்கு தடவி மசாஜ் செய்து 20 நிமிடம் ஊற வைத்து கழுவ, சருமத்தின் ஈரப்பசை தக்க வைக்கப்படும்.

கண்ட க்ரீம் மாய்ஸ்சுரைசர்களை கை, கால்களுக்கு தேய்ப்பதற்கு பதிலாக, தினமும் இரவில் படுக்கும் முன் தேங்காய் எண்ணெய்யை கை, கால்களுக்கு தடவி வந்தால், கைகளில் ஏற்படும் வறட்சியைத் தடுக்கலாம்.

# சுவையான கரட் அல்வா செய்வது எவ்வாறு...!

**தேவையானவை:**



**கரட் - ஒரு கிலோ**
**பால் - அரை லிட்டர்**
**நெய் - 50 கிராம்**
**முந்திரி - 20 முதல் 30**
**சர்க்கரை - 200 கிராம்**
**ஏலக்காய் - 3**
**கிராம்பு - 3**

**செய்முறை:** பாலை நீர் ஊற்றாமல் காய்ச்சி வைக்கவும். மற்ற தேவையானவற்றை எடுத்துக் கொள்ளவும். கரட்டை மேல் தோல் சீவி துருவிக் கொள்ளவும். அடுப்பில் அடிகனமான பாத்திரத்தை வைத்து துருவிய கரட்டை மட்டும் சேர்த்து நீர்பதம் வற்ற வதக்கவும். பின் அதில் பால் மற்றும் சீனி சேர்த்து சுருளும் வரை கிளறவும். வேறொரு பாத்திரத்தில் நெய்யை சூடாக்கி முந்திரி, ஏலக்காய், கிராம்பு ஆகியவற்றை வறுத்து வைத்துக் கொள்ளவும். பால் வற்றியதும் அதில் வறுத்த முந்திரியை சேர்த்து நெய் பிரியும் வரை கிளறிக் கொண்டே இருக்கவும். நெய் பிந்து வந்ததும் சுவையான கரட் அல்வா தயார்.

**குறிப்பு:** கரட்டில் உள்ள இயற்கையான நிறமே போதுமானது. சுவையை கூட்ட கன்டன்ஸ்ட் மில்க் சேர்த்துக் கொள்ளலாம். வெறும் வாணலியில் கரட்டை நீர் போக வதக்குவதால் பச்சை வாசம் நீங்கும்.

எனக்கே
தெரியாமல்
உனக்கும்
எனக்கும்
ஒரு ரகசிய
சந்திப்பு நிகழ்கிறது
கனவில்!!!





எனக்காகவும் ஒரு
இதயம் துடிக்கும் என
நினைத்து இருந்தேன்
ஆனால் அதுவும்
என்னிடம்
நடித்துவிட்டு தான்
சென்றது!

**தொகுப்பு :- ஹாசினி**

07ஆம் பக்க தொடர்ச்சி...

தேர்தல் களத்தில் 35 வேட்பாளர்கள் இருந்தனர். ஆனாலும் போட்டி என்னவென்றால் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியிம் கோட்டபாய ராஜபக்ச அவர்களுக்கும், ஐக்கிய தேசிய கட்சியில் சஜித் பிரேமதாசாவிற்கும் தான் இந்த போட்டி காணப்பட்டது. கோட்டபாயராஜபக்ச அவர்கள் 69 இலட்சத்து 24 ஆயிரத்து 255 வாக்குகள் வித்தியாசத்திலும் சஜித் பிரேமதாச 55 இலட்சத்து 64 ஆயிரத்து 239 வாக்குகளையும் பெற்றிருந்தனர். மொத்தமாக 1.6 கோடி வாக்குகளால் 52.55 வீதம் கோட்டபாயவிற்கும் 41.91 வீதம் சஜித்திற்கும் வாக்களித்திருந்தனர்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இலங்கையில் காணப்பட்ட நிலைமைகள் தொடர்பாக பார்க்கும் பொழுது தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையான பகுதிகளிலே 80 வீதம் வசிக்கிறார்கள். அதிகமான வாக்குகள் சஜித் பிரேமதாசாவிற்கும் வாக்குகள் வழங்கப்பட்டிருந்தது. மிகப்பெரும் ஆதரவோடு கோட்டபாய ராஜபக்ச சிங்கள இனவாதிகளினுடைய வாக்குகளினால் வெற்றிபெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கவொரு விடயம். பெரும்பான்மை சிங்கள பௌத்தர்கள் கோட்டபாயவிற்கும் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா பகுதிகளில் வாழும் சிறுபான்மையினர் சஜித் பிரேமதாசவிற்கும் கண்மூடித்தனமான ஆதரவை வழங்கியிருந்தனர். வடக்கு கிழக்கு பகுதிகளில் தோட்டத்தொழிலாளர்கள் இலங்கையின் மத்திய பகுதியில் வாழும் சிறுபான்மையினத் தமிழர்களும் முஸ்லிம்களினதும் மொத்த வாக்கு வீதம் 16 வீதமாக இருந்தது. அதே போன்று சமாதான சூழ்நிலையில் உருவானது மட்டுமே ராஜபக்ச சகோதரரின் வெற்றிக்கு காரணம் என்று சொல்லிவிட முடியாது. மைத்திரிபால சிறிசேன விக்ரமசிங்க கூட்டணியில் ஏற்பட்டுள்ள பிளவுதான் சஜித் பிரேமதாசாவின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்துள்ளது.

இதுவே கோட்டபாய ராஜபக்சவின் வெற்றிக்கு காரணம் என்றும் கூறமுடியும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அவரது இளைய சகோதரர் கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதி பிரச்சாரத்தை இரண்டு நாட்களுக்கு முன்பாகவே தொடங்கியிருந்தனர். தங்களுக்கென்று இலங்கையில் சிறிலங்கா பொதுஜன பெரமுன என்னும் கட்சியை தொடங்கி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு இடையிலும் நிலைமை சாதகமாக பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும் சிங்களவர்கள் மத்தியிலும் கிராமப்புற வாக்காளர்கள் மகிந்த ராஜபக்ச சகோதரர்களுடைய போலி தேசியத்தை நம்பி அவர்களுக்கு வாக்களிப்பதற்கு முன்வந்திருந்தனர்.

குறிப்பாக பார்த்தால் இலங்கையின் செல்வாக்கை தமக்காக அதிகரித்து தமது ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுபடுவதற்காகவும் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க போன்றவர்கள் ஊழல்வாதிகள் என அவர்களை சித்தரித்து மக்கள் மத்தியில் பிழையான பிரச்சாரங்களை மேற்கொண்டு அவர்கள் தங்களுடைய வெற்றிக்கு வழிவகுத்து கொண்டார்கள். கோட்டபாய ராஜபக்சவின் வெற்றிக்கு மிக முக்கியமான காரணம் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் என்று குறிப்பிடலாம். அந்த தாக்குதலானது முஸ்லிம்கள் பயங்கரவாத தாக்குதல்களை தாக்கியிருந்தமை சிங்களவர்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை மட்டுமல்லாமல் 70 வீதத்திற்கும் அதிகமான சிங்களவர்களின் ஆதரவு கிடைப்பதற்கு இந்த குண்டு தாக்குதல் காரணமாக இருந்தது. அவ்வாறிருப்பின் இனரீதியான பிளவுகள்பட்டு கிடந்ததை தொடர்ந்து முஸ்லிம்களின் பிரச்சனைக்கு பின்னர் கோட்டபாய ராஜபக்சவின் வெற்றியானது உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

அதுபோன்று சிறுபான்மையின மக்கள் மத்தியில் கோட்டபாய ராஜபக்சவின் நம்பிக்கை பாரியதொரு வெற்றிடத்தை காணப்பட்ட பொழுதும் சீனாவுடனான ராஜபக்சவின் நட்புறவு என்பது அது பாரியதொரு நட்புறவை ஏற்படுத்தி இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளை வீழ்த்தி பணரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் அனைத்து கட்டுமான உதவிகளையும் இலங்கைக்கு வழங்கி தமது பலத்தை நிரூபிக்கும் வகையிலே சீனாவினுடைய உதவி இருந்ததன் காரணமாக இலங்கை அரசானது கோட்டபாய ராஜபக்சவுடன் இணைந்து இந்த பாரிய வெற்றியை பெற்றிருக்கிறது. இற்றைவரையும் அந்த வெற்றி தொடர்கிறது.

இன்று இலங்கையினுடைய தீவுப்பகுதிகள் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளை சீனா தனது வலையங்களாக பிரகடனப்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்து கொண்டு இருக்கின்ற நிலையில் அரசியலில் அடுத்த கட்டமாக என்ன இடம்பெற போகிறது என்பதை அவர்கள் அனைவரும் அவதானித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் ஜெனீவாவினுடைய தீர்மானத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்குமா? இல்லையா? என்பது மறுபுறத்தில் சென்றுகொண்டிருக்க இந்த ஆட்சி தொடர்ந்து செல்லுமா? அல்லது கவிழ்க்கப்படுமா? என்னும் மற்றுமொரு நிலை காணப்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே இவற்றை அடிப்படையாக வைத்து பார்க்கும் பொழுது தமிழ் மக்களுக்கான இலக்கு தீர்வு என்பது போராட்டத்தின் வடிவில் தான் அதனை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையே இந்த அரசாங்கம் சென்று கொண்டு இருக்கின்ற நடைமுறையிலான சில விடயங்களை வைத்து பார்க்க கூடியதாக இருக்கிறது.

பூகோள அரசியல் என்னும் பொழுது இந்தியா தனது சுயநல அரசியலுக்காக விடுதலைப்புலிகளை பயன்படுத்தியது போன்று நாம் ஏமாறாமல் எங்களுக்கான தீர்வை நாமே பெற்றுக்கொள்ளும் வகையில் அதற்கான ஒரு உறுதியுடன் எமது அகிம்சை வழியிலான போராட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக தமிழ் மக்கள் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்னும் இலக்கை அடைய முடியும் என்பதை கூறிநிற்க விரும்புகின்றோம்.

# சாக்ரடீஸ் தத்துவங்கள்

1.அழகுக்கு ஆயுள் மிகக் குறைவு..!

2. அற்ப மனமுடையோர் பழிவாங்கும் பண்புடையோர்.!

3. ஆசைகளை அடக்க வேண்டியதில்லை.. அதைச் சீரமைப்பதுதான் முக்கியம்.!

4. ஆடம்பரம் என்பது போலியான வறுமை மனநிறைவு என்பது வற்றாத செல்வம்.!

5. உங்கள் பேச்சைக் கொண்டுதான் அன்பு மதிக்கப்படும்.. உங்கள் அன்பை போலதான் நடத்தை இருக்கும்.. உங்கள் நடத்தையை போலத்தான் வாழ்க்கை இருக்கும்.!

6. தமக்குத் தீங்கிழைத்தவன் தன்வசம் சிக்கிய போதிலும் அவனை மன்னிப்பவனே இறைவனுக்கு நெருக்கமாகிறான்.!

7. உலகில் நல்லது ஒன்றே அறிவு.. தீமை ஒன்றே அறியாமை.!

8. உனது அறிவையும் ஆற்றலையும் பகிர்ந்து கொள்ளாவிட்டால் அது உன்னை அழித்துவிடும்.!

9. நீ ஒருவனிடத்தில் உதவியாகப் பெறக்கூடியதை எக்காரணத்தை முன்னிட்டும் உரிமையாகக் கேட்காதே.!

10. மிகக் குறைந்ததை கொண்டு திருப்தி அடைபவனே முதன்மையான செல்வந்தன்.. ஏனெனில் இயற்கையின் செல்வம் திருப்தி தான்.!

11. தேவைகள் குறையும் போதுதான் தெய்வத்தன்மையை அடைய முடியும்.!

12. மனிதன் குறை உள்ளவன் மட்டும் அல்ல.. குறை காண்பவனும் ஆவான்.!

13. ஆடம்பரம் என்பது நாமே தேடிக்கொள்ளும் வறுமை.!

14. மனிதனின் இயற்கையான குணங்களில் ஒன்று.. மிகச்சிறப்பாக சிந்தனை செய்வது ஆனால் முட்டாள் தனமாக செயல்படுவது.!

15. புரிந்து கொள்ளாத போதும் பொறாமை படும் போதும்.. மனிதன் மற்றவனை முட்டாளாக கருதி விடுகிறான்.!

16. உலகமே நாடக மேடை அனைத்து ஆண்களும் பெண்களும் அதில் நடிகர்களே.!

17. தன்னை பூரணமாக அறியாதவன் பிறரை ஒரு நாளும் சரியாக அறிய முடியாது.!

18. நல்லது போனால் தெரியும்.. கெட்டது வந்தால் தெரியும்.!

19. யோசனைகளை கூறுங்கள் என்று பிறரைக் கேட்கிறோம் ஆனால்.. நம் கருத்தை அவர்கள் ஆமோதிக்க வேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறோம்.!

20. சாகச செயல்களின் நறுமணம் தான் புகழ்.!

# யாழ் குடா தீபகற்பத்தை தன்வசப்படுத்தும் சீனா காலனித்துவமும் இந்தியாவின் நிலையும்

இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மையின சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்று ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பதவியேற்றதில் இருந்து தனது இராணுவ பௌத்த மேலாதிக்க சிந்தனை கொண்டு ஆட்சியை நடாத்தி வரும் நிலையில் வெளியுறவுக் கொள்கைகளில் கடும் போக்கை கையாண்டு வருவது கண்கூடாக தெரிகின்றது. தமிழ் மக்கள் தமது தாயகம், சுயநிர்ணயம் கோரி போராடிய காலமான 1978 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த பெரும்பான்மையின தலைவர்கள் தமிழர்களின் சுயநிர்ணயம் தாயகம் நோக்கிய போராட்டத்தை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் அதனை பூண்டோடு ஒழிப்பதற்கு தமது வெளியுறவுக்கொள்கைகளில் சில நாடுகளை உள்வாங்கி தமது சுயநல அரசியலுக்காக அவ் நாடுகளை பயன்படுத்தி வந்ததை அக்காலகட்டங்களில் இருந்து காணக்கூடியதாக உள்ளது.

1978 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதியான ஜே.ஆர் ஜெயவர்த்தன அவர்கள் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தையும் தமிழர்களின் பாதுகாப்பு கவசங்களாகவும் அவர்களது இருப்பை உறுதிப்படுத்த இருந்த தமிழர்களின் ஆயுத அமைப்புகளை குறிப்பாக விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க அதனை ஆரம்ப புள்ளியில் வைத்து வேறோடு புடுங்கி எறிய ஜே.ஆர் கடும் போக்கையும் மிலேச்சத்தனமான செயல்பாட்டையும் தமிழர்கள் மீது தனது இராணுவத்தை கொண்டு மேற்கொள்ளத் தொடங்கினார். அதற்காக அவர் தனது வெளியுறவுக் கொள்கையில் எடுத்த சில விடயங்களையும் இங்கு உற்று நோக்குவோம். அக்காலகட்டங்களில் இந்தியாவில் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்கள் இலங்கை மீது குறிப்பாக தமிழ் மக்கள் மீது மிகுந்த கரிசனையும் அன்பும் உள்ளவராக காணப்பட்டார். அத்துடன் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் செயற்பாட்டில் மிகுந்த கோபமடைந்த நிலையில் இலங்கை அரசை தனது காலடியில் வைத்திருக்கவும் தனது பிராந்திய நலனை கருத்தில் கொண்டு இலங்கை அரசை அடிபணிய வைக்க இந்திராகாந்தி அவர்கள் வடகிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளையும் அவர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கி இலங்கை அரசுக்கெதிராக போராட வைத்தார். இதன் மூலமாக இலங்கை அரசை அடிபணிய வைக்க அவர் முயற்சித்தார்.

ஆனால் சாணக்கியத்தனமும் அரசியல் நரித்தனமும் உள்ள ஜே.ஆர் அவர்கள் தமிழ் மக்களின் ஆயுத இயக்க அமைப்புகளை ஒடுக்க அவர் எடுத்த ஓர் வெளியுறவுக் கொள்கையானது மிகவும் புத்திசாலித்தனமானதாகவும் போராட்டத்தின் வேகத்தை குறைத்ததுடன் ஒற்றுமையாக ஓர் அணியில் இணைந்து போராடிய இயக்க அமைப்புகளை பிரித்து அவர்களுக்குள் மோதவிட்டதுமன்றி சிறுபான்மை இனமான முஸ்லிம் தமிழ் மக்களை மோதவிட்டு குளிர்காய்ந்தது. இவ்வாறான சாணக்கியத்தனமாக செயல்பட ஜே.ஆர் ஜெயவர்த்தனவுக்கு உதவியது. உலகின் மிகப்பலம் வாய்ந்த புலனாய்வு அமைப்பை கொண்ட நாடான இஸ்ரவேல் அக்காலத்தில் இஸ்ரவேல் நாட்டுக்கு எந்தவொரு நாடும் தமது நாட்டில் தூதரகம் அமைக்க அனுமதி வழங்காத நிலையில் ஜே.ஆர் அவர்கள் தனது நாட்டில் இஸ்ரவேல் தூதரகத்தை அமைக்க அனுமதி வழங்கி இஸ்ரவேலை தனது நாட்டு சுயாட்சி கோரி போராடும் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்க இஸ்ரவேலின் உதவியை பெற்றார். இஸ்ரவேலின் மொசாட் அமைப்பானது இலங்கை இராணுவத்துக்கு பல புலனாய்வு உதவிகளை வழங்கியது முதன் முதலில் விசேட அதிரடிப்படையினை உருவாக்கி அதற்கு பயிற்சியையும் இவ் இஸ்ரவேல் நாடு வழங்கியது. இந்த அதிரடிப்படை 1990 களில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தமிழ் மக்களுக்கு இடையில் மோதலிட்டு பல படுகொலைகளை கிழக்கு மாகாணத்தில் அரங்கேற்றியது. இவ்வாறாக இஸ்ரவேல் நாடு தமிழர்களின் போராட்டத்துக்கு செய்த பாதகமான செயல் அதிகம் இதனை ஜே.ஆர் மிக சாணக்கியமாக தனக்கு சார்பாக பயன்படுத்தி ஓரளவு வெற்றி கண்டார். அத்துடன் இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தலை வழங்கி இருந்தார். அதேபோல 2005 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் விடுதலைப்புலிகள் இராணுவ சமநிலை கொண்டு மீண்டும் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முயற்சித்த பொழுது அதனை தடுப்பதற்கு பாரிய ஆயுத உதவியை இந்தியாவிடம் கோரிய பொழுது இந்தியா அப்பொழுது மறுத்திருந்தது. உடனடியாக சந்திரிக்கா அவர்கள் பாகிஸ்தானுடன் தொடர்பு கொண்டு பல்குழல் பீரங்கிகளை உடனடியாக இறக்குமதி செய்து புலிகளின் யாழ்ப்பாணம் நோக்கிய முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தியதுடன் இந்தியாவுக்கு மறைமுகமாக ஓர் செய்தியையும் வழங்கி இருந்தார்.

2008 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச அவர்கள் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை முற்றாக அழிக்க இந்தியாவிடம் உதவி கோரிய பொழுது இந்தியா சற்று பின்வாங்கிய நிலையில் அவரும் இந்தியாவுக்கு எதிரான நாடுகளான சீனா பாகிஸ்தான் என்பவற்றுடன் சினேகபூண்டு அவர்களிடம் பாரிய இராணுவ ஆயுத உதவிகளை பெற்று விடுதலை புலிகளையும் அப்பாவி தமிழ் மக்களையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்த பொழுது முதலில் உதவி செய்ய பின்வாங்கிய இந்தியா தனது சுயநல பிராந்திய நலனுக்காகவும் சீனா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனான இலங்கையின் உறவில் ஏற்பட்ட அதிர்ப்தியில் இறுதியில் தானும் இராணுவ உதவிகளை வழங்கியது. பல ராடர்களை வழங்கியது மட்டுமன்றி தனது இராணுவத்தையும் இறுதிக்கட்டத்தில் களமிறக்கியதாக தெரியவருகின்றது.

ஆனால் இந்தியா எவ்வளவு உதவி செய்தாலும் மகிந்த அவர்கள் சீனா பக்கமே தனது வெளியுறவுக் கொள்கையை நிலைநிறுத்தி வந்துள்ளார். அதற்கு காரணம் சீனா ஓர் பௌத்த நாடாக காணப்படுவதுடன் எப்பொழுதுமே இந்தியாவை பயுமுறுத்தி வைக்கவும் இந்தியா இலங்கையை தனது காலனித்துவ நாடாக ஒரு காலத்தில் மாற்ற முயற்சிப்பதை தடுக்கவும் இந்தியா அளவு சமபலமான ஓர் வல்லரசின் உதவி இலங்கைக்கு தேவைப்பட்டது.

ஆகவே மகிந்த அவர்கள் சீனாவுடனான தனது உறவை வலுப்படுத்த தொடங்கியதுடன் சீனாவின் நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்யவும் சீனாவின் உற்பத்தி நிலையங்கள் இங்கு உருவாக்கவும் அனுமதி வழங்கியதுடன் இந்தியாவையும் பகைக்காமல் திருகோணமலை துறைமுகத்தையும் இந்தியாவுக்கு வழங்கியதுடன் கொழும்பு காங்கேசன் துறை தொடருந்து பாதை நிர்மானத்துக்கு அனுமதி வழங்கியதுடன் இந்தியாவின் தமிழர் பிரதேசங்களில் வீட்டுத்திட்டங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கினார். இவ்வாறு இரு நாடுகளையும் பரவலாக தனது வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்தி சென்ற நிலையில் 2019 ஆம் ஆண்டு பதவியேற்ற மகிந்த ராஜபக்ச அவர்களின் சகோதரரான கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தனது அண்ணனின் வழியில் சீனாவுடனான வெளியுறவுக் கொள்கையை மேலும் வலுப்படுத்தி செல்வதை காணக்கூடிய நிலையில் இந்தியாவை




சீண்டும் விதமாகவும் இந்தியாவின் இலங்கை மீதான பிராந்திய நலனை குறைக்கவும் சில அதிரடி செயல்பாட்டில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். இலங்கையின் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கி இருந்த நிலையில் அதற்கு பெரும்பான்மை சிங்கள மக்களும் பல அரசியல் தலைமைகளும் மற்றும் துறைமுக ஊழியர்களும் தொழில் சங்கங்களும் எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் கோட்டபாய அரசு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிடம் இருந்து மீளப்பெற்றுக் கொண்டது. இதனால் மிகுந்த எரிச்சலடைந்த இந்தியா இது தொடர்பாக தனது வெளியுறவு அமைச்சு ஊடாக இலங்கைக்கு தனது அதிர்ப்தியை வெளியிட்டதுடன் இவ் விவகாரத்தில் பின்புலத்தில் சீனா உள்ளதாக குற்றஞ்சாட்டியதுடன் இலங்கைக்கு கொடுத்த 400 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலரை திருப்பி தரும்படி இந்தியா கூறியுள்ள நிலையில் இலங்கை அரசு சீனாவிடம் 1500 ஆயிரம் அமெரிக்க டொலரை கடனாக பெற்று இந்தியாவிடம் பெற்ற 400 ஆயிரம் மில்லியன் டொலரை திருப்பி கொடுத்ததுடன் கொழும்பு கிழக்கு முனையம் இந்தியாவுக்கு இல்லை என்பதை அழுத்தமாக கூறியது. அடுத்து கோட்டபாய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை இந்தியாவின் பிராந்தியத்துக்கு மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்த கூடியதாக மாறியுள்ளது. அது என்னவெனில் யாழ் தீபகத்தில் உள்ள மூன்று தீவுகளில் சூரிய மின்சக்தி திட்டங்களை உருவாக்க சீனாவிடம் வழங்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

யாழ் மாவட்டத்துக்கு வெளியில் உள்ள தீவுகளான நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய தீவுகளில் இதனை செயல்படுத்த உள்ளதாக தெரியவருகின்றது. இத்தீவுகள் அனைத்தும் இந்தியாவுக்கு மிக அருகில் உள்ளது. குறிப்பாக 41 கிலோமீற்றர் தூரத்தில்தான் ஒவ்வொரு தீவுகளும் உள்ளது. இத் தீவுகளை சீனாவுக்கு வழங்கினால் சீனா இத் தீவுகளில் இருந்து இந்தியாவை கண்காணிக்க மிகவும் வசதிகள் அமையும் அது இந்தியாவுக்கு மிகப்பெரும் ஆபத்தாக மாறும் இலங்கை பௌத்த பேரினவாத அரசுகள் காலகாலமாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தையும் அவர்களது சுயநிர்ணயத்தை ஒழிப்பதற்கு ஆசியாவில் உள்ள வல்லரசுகளை தமது சாணக்கிய காய்நகர்த்தல் ஊடாக பயன்படுத்துவது அதிலே குளிர் காய்வதுமாக உள்ள நிலையில் தற்பொழுது இந்தியாவின் பிராந்திய பாதுகாப்பு தன்மை சீனாவிடம் கேள்விக்குறியாக போயுள்ளது. அண்மைக்காலமாக சீனா இந்தியாவின் எல்லை பகுதியான லாடய் பகுதியில் அத்துமீறி தாக்குவதும் பாகிஸ்தான் ஒரு புறம் இந்தியாவை குறிவைத்து தாக்குவது என இந்தியா பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் தற்பொழுது இலங்கை தீவுப்பகுதிகளில் சீனாவின் உள் நுழைவானது தனியே இந்தியாவுக்கு மட்டுமன்றி வடகிழக்கு தமிழர்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக மாறும் நிலை தோன்றியுள்ளது. அத்துடன் பளை பகுதியில் சுமார் 3000 ஏக்கர் தென்னங்காணியை சீனாவுக்கும் சிங்கள முதலாளிமாருக்கும் வழங்க திரைமறைவு நடவடிக்கை நடப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர். எல்.எப் கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளார். ஆகவே சீனாவின் வடபகுதி நோக்கிய நகர்வானது வடபகுதி மக்களை மிகுந்த நெருக்கடிக்கு கொண்டு செல்லக்கூடியதாகும் இதனை தடுக்க அரசியல் தலைமைகள் ஆக்கபூர்வமான செயல்பாட்டில் ஈடுபட வேண்டும். இந்தியாவுடன் இது தொடர்பாக ஓர் முடிவுக்கு வர தமிழ் தலைமைகள் முயல வேண்டும். இந்தியாவும் தனது பிராந்திய நலனில் தொடர்ந்து அக்கறை கொள்ளாமல் தனது சுயநலனை ஒதுக்க தமிழர்களை அரவணைத்து அவர்களின் அரசியல் ரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வை வழங்க முன்வருவதுடன் தனது பிராந்திய பாதுகாப்புக்கு வடகிழக்கு தமிழர்களின் கையில் தான் உள்ளதென்பதை புரிந்துகொள்ள வேண்டும். விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் அவர்களின் பலமான கடற்புலிகளால் இந்தியாவின் கடல் எல்லைகள் பாதுகாக்கப்பட்டது என்பது மறைமுக உண்மையே. தற்பொழுது இந்தியாவின் இலங்கை பக்கமான கடல் எல்லைகள் பாதுகாப்பற்றதாக உள்ளது என்பது மறக்க முடியாத உண்மையே.

ஆகவே இந்தியா மத்திய அரசு வடகிழக்கு தமிழர்களை அரவணைத்து பௌத்த மேலாதிக்க சிந்தனையுடனும் பெரும்பான்மை என்ற மமதையுடனும் செயல்பட்டுவரும் இலங்கை அரசை வழிக்கு கொண்டுவர தனது தமிழர்கள் மீதான பார்வையை அவர்களுக்கு சாதகமாக திருப்புவதுடன் வடகிழக்கு தமிழர்களை கொண்டே வட பகுதியில் ஆக்கிரமிக்க என்றும் சீனாவின் காலனித்துவத்தை அழிக்க முடியுமென்பதை புரிந்துகொண்டு தனது வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்பத்த வேண்டும் என்பதுடன் தமிழர்களின் உரிமைக்காக போராடுகின்றோம் எனக்கூறும் சகல தமிழ் தலைமைகளும் இக் காலவோட்ட அரசியலை புரிந்து கொண்டு தமது சாணக்கியமான அரசியல் காய் நகர்த்தலை மேற்கொண்டு இந்தியாவை வைத்து இலங்கை அரசை தமிழர்கள் பக்கமான தீர்வை பெற முயற்சிக்க வேண்டும் என்பதுடன் இவ்வாறான நிலை மறுகால அரசியலை தவறவிட்டால் நமது இருப்பு கேள்விக்குறியாகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை என்பதுடன் அதற்கான அரசியல் வியூகங்களை அமைத்து மக்களையும் தன்னார்வ எழுச்சியுடன் அகிம்சை வழியாக சீனாவின் உள்நுழைவை தடுக்க ஓரணியில் ஓர் புள்ளியில் இணைந்து செயல்படுவதே காலத்தின் முக்கிய தேவையாகும். விடிவு கிடைக்கும் திடமாயிருப்போம்.

**தமிழ் கிறுக்கன்**

# அறிவியல் உலகம்

## பேஸ்புக்கின் புது ஸ்மார்ட்வாட்ச் மாடல் அடுத்த ஆண்டு அறிமுகம்

பேஸ்புக்கின் புது ஸ்மார்ட்வாட்ச் மாடல் அடுத்த ஆண்டு அறிமுகம் செய்யப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் விலையை 200 டாலர்கள் வரை நிர்ணயம் செய்யப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இப்புதிய ஸ்மார்ட்வாட்ச் ஸ்மார்ட்போன் இல்லாமலும் இயங்கும் வசதி,பேஸ்புக் மெசன்ஜர் மற்றும் பல்வேறு முன்னணி பிட்னஸ் தளங்களுடன் இணைந்து செயல்படும் வசதி கொண்டிருக்கலாம்.

மேலும் பேஸ்புக் நிறுவனம் தனது அணியக்கூடிய சாதனங்களுக்கென சொந்தமாக ஓஎஸ் ஒன்றை உருவாக்கி வருவதாகவும் கூறப்படுகிறது.



## கடல் குப்பையை கண்டறியும் மென்பொருள்!

பிளாஸ்டிக் மீதான தடைகள் போடப்பட்டாலும், தினமும் பல லட்சம் டன் பிளாஸ்டிக் குப்பை கடலில் கலந்து வருகின்றன. இதனால், உலகக் கடல் பரப்பில், எங்கே, எவ்வளவு பிளாஸ்டிக் கழிவுகள் குவிந்து வருகின்றன என்பதை கண்டுபிடிப்பதே கடலியல் வல்லுனர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. அவர்களுக்கு உதவும் வகையில், கடலின் மேற்பரப்பை விமானத்திலிருந்து படம் பிடித்து தந்தால், அதை அலசி, பிளாஸ்டிக் கழிவுகள் மிதக்கும் பகுதிகளை துல்லியமாக கணித்து தரும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

ஸ்பெயினின் பார்சிலோனா பல்கலைக்கழக விஞ்ஞானிகள், கடலோனியா கடற்கரை பகுதிக்கு அப்பாலுள்ள, கடல் பரப்பின் புகைப்படங்களை சேகரித்தனர். அவற்றில், பிளாஸ்டிக் கழிவுகள் மிதக்கும் படங்களை அடையாளம் கண்டறிய, செயற்கை நுண்ணறிவு மென்பொருளுக்கு பயிற்சி தந்தனர். இதற்கு பின், அந்த மென்பொருளே துல்லியமாக கடலின் மேற்பரப்பு படங்களை பார்த்து அலசி, குப்பை மிதக்கும் பகுதிகளைக் கண்டறிந்து சொல்ல துவங்கியது. இத்தொழில்நுட்பம், கடலை சுத்திகரிக்க, நேரடியாக படகில் கிளம்பும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.



## கூகிள் நிறுவனத்துக்கு 1.1 மில்லியன் யூரோ அபராதம் விதித்த பிரான்ஸ்!

பிரான்ஸ் ஹோட்டல்களின் தரவரிசையை தவறாக காட்டியதற்காக கூகிள் நிறுவனத்துக்கு 1.1 மில்லியன் யூரோ அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் ஹோட்டல்களின் தவறான தரவரிசையைக் காட்டியதற்காக கூகிள் 1.1 மில்லியன் யூரோ அபராதம் செலுத்த ஒப்புக் கொண்டுள்ளது.


முன்னதாக, கூகிள் அதிகாரப்பூர்வ ஆதாரமான 'about பிரான்ஸ்' மற்றும் ஹோட்டல் தொழில் வலைத்தளத்திலிருந்து தகவல்களைப் பயன்படுத்தி ஹோட்டல்களுக்கு 1 முதல் 5 நட்சத்திரங்கள் வரை தரவரிசையாக வழங்கியது. கூகிளில் தரவரிசை காண்பிக்கப்படுவது குறித்து ஹோட்டல் உரிமையாளர்களிடமிருந்து வந்த புகார்களைத் தொடர்ந்து, பிரெஞ்சு அரசாங்க நிறுவனம் 2019 மற்றும் 2020-ஆம் ஆண்டுகளில் இந்த விவகாரத்தில் விசாரணைகளைத் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து, கூகிளின் ஹோட்டல் தரவரிசை நுகர்வோரை தவறாக வழிநடத்துவது விசாரணையில் தெரியவந்த நிலையில், கூகிள் அயர்லாந்து மற்றும் கூகிள் பிரான்ஸ் ஆகிய இரண்டும் அபராதம் செலுத்த ஒப்புக் கொண்டுள்ளன என்று பிரான்சின் நிதி அமைச்சகம் மற்றும் மோசடி கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.




## மின் வாகன தயாரிப்பில் புதுமை!

ஒரு மின் வாகனத்திற்கு வேண்டிய அடிப்படை பாகங்களை வைத்து 'சேஸிசை மட்டும் நாங்கள் தயாரித்துத் தருகிறோம். நீங்கள் அதன் மேல், கார், வேன் என்று எந்த வண்டியையும் கட்டுவித்து விற்றுக்கொள்ளுங்கள். இப்படிச் சொல்லி அசத்துகிறது 'இஸ்ரேலின் மின் வாகன நிறுவனமான 'ஆர்.ஈ.ஈ., ஆட்டோமோட்டிவ்.உலக மின் வாகன சந்தையில் இடம்பிடிக்கத் துடிக்கும் ஜப்பானின் டொயோட்டோவும், இந்தியாவின் மகிந்திரா குழுமமும் முந்திக்கொண்டு ஆர்.ஈ.ஈ., சேசிஸ்களை ஆர்டர் செய்துள்ளன.



பல கி.மீ., தொலைவு பயணிக்க உதவும் நவீன மின்கலன்கள், சக்கரத்தில் நேரடியாகப் பொருத்தப்பட்ட மோட்டார்கள், பிரேக்குகள், சஸ்பென்சன், டிரான்ஸ்மிசன் என்று சகல பாகங்களிலும், வாகன தயாரிப்பாளர்கள் கேட்கும் வகையில் தயாரித்துத் தருவதாக ஆர்.ஈ.ஈ., ஆட்டோமோட்டிவ் சொல்கிறது.

அடிப்படை பாகங்களை, பொருத்தி, ஒரு 'ஸ்கேட் போர்டு' வடிவில் தந்தாலும், மின் வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிலும் ஆர்.ஈ.ஈ., கவனம் செலுத்தவுள்ளது.இதற்கென பிரிட்டனில், பொறியியல் ஆராய்ச்சி மையத்தை ஆர்.ஈ.ஈ., ஆட்டோமோட்டிவ், ரூ.670.5 கோடி செலவில் தொடங்கியுள்ளது.

இதனால் மின் வாகன தயாரிப்பு முறையில் புதுமை பிறக்கும் என்பதோடு, மின்சார வாகன உயர் தொழில்நுட்பங்கள் ஜனநாயக மயப்படுத்தப்பட்டு விரைவில் பரவும் எனவும் வல்லுனர்கள் பாராட்டியுள்ளனர்.

**அறிவியல் ஒரு புத்துணர்ச்சி தரும் விளையாட்டு. இந்தப் பேரண்டம் முழுதுமே அதன் ஆடுகளம் தான்.**

**இசிடோர் ஐசக் ராபி,**
**அமெரிக்க இயற்பியலாளர்**



# விளையாட்டு செய்திகள்

## உலக பரா தடகளத்தில் வெண்கலத்தை சுவீகரித்த இலங்கை வீராங்கனை

உலக பரா தடகள கிராண்ட் பிரிக்ஸ் 2021 போட்டியில் பரா தடகள வீராங்கனை குமுது பிரியங்கா வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இது குறித்து விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வீராங்கனை பிரியங்காவுக்கு டுவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"டுபாயில் நடந்த உலக பரா தடகள கிராண்ட் பிரிக்ஸில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி எங்கள் தேசத்துக்கு வெண்கலப் பதக்கத்தை வென்றமைக்காக குமுது பிரியங்காவுக்கு வாழ்த்துகள்" என அமைச்சர் டுவிட் செய்துள்ளார்.

டுபாயில் பெப்.10ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் 52 நாடுகளைச் சேர்ந்த 471 வீர.வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர்.




## இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக சமிந்த வாஸ் நியமனம்!

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப் பயணத்தின் போது. அவர் அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளர் பதவியை தொடருவார்.

முன்னதாக தனிப்பட்ட காரணங்களைக் கூறி வேகப்பந்து வீச்சு பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய டேவிட் சாகருக்கு பதிலாக சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

47 வயதான சமிந்த வாஸ். இலங்கை அணிக்காக 111 டெஸ்ட் போட்டிகளில் 355 விக்கெட்டுகளையும் 322 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 400 விக்கெட்டுகளையும் ஆறு ரி-20 போட்டிகளில் 6 விக்கெட்டுகளை பெற்றுக்கொடுத்துள்ளார்.

அடுத்த மாத ஆரம்பத்தில் மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி. மூன்று ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர். இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.



## "எலியகந்த மோட்டார் பந்தயம்" பெப்ரவரி 27 இல் ஆரம்பம்

இருபத்தைந்தாவது தெற்கு எலியகந்த மோட்டார் பந்தயம் எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. மாத்தறை பிரவுண்ஸ் ஹில் பகுதியில் இந்தப்பந்தயங்கள் மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளன.



16 மோட்டார் சைக்கிள் பந்தயங்களும். 17 மோட்டார் கார் பந்தயங்களும் இடம்பெறவுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் பந்தயங்கள் அனைத்தும் 27 ஆம் திகதியும் கார் பந்தயங்கள் 28 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

600 மீற்றர் ஓட்ட தூரத்தை கொண்ட இந்தப்போட்டியில் அதிவேகமாக தூரத்தை கடக்கும் போட்டியாளர் வெற்றியாளராக அறிவிக்கப்படவுள்ளார்.

கொரோனா அச்சம் காரணமாக கட்டுப்பாட்டுக்களுடன் இந்த பந்தயம் இடம்பெறவுள்ளமையால் அநேகமாக பார்வையாளர்களின்றியே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இலங்கை வேகப்பந்து வீச்சாளர் தம்மிகா பிரசாத் ஓய்வு!



இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தம்மிகா பிரசாத். சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

தனது ஓய்வுக்குறித்து தம்மிகா பிரசாத் கூறுகையில். 'சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கும் இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதற்கும் இதுவே சரியான தருணம் என்று நான் நினைக்கிறேன்.

நான் தொடர்ந்து உள்நாட்டு கிரிக்கெட்டில் விளையாட முடிவு செய்துள்ளேன். ஏற்கனவே எஸ்.எஸ்.சி-க்கு 19 ஆண்டுகளாக விளையாடியுள்ளேன்' என கூறினார்.

37 வயதான பிரசாத். 25 டெஸ்ட் மற்றும் 24 ஒருநாள் மற்றும் ஒரேயொரு ரி-20 போட்டியில் விளையாடி மொத்தம் 107 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதில் டெஸ்டில் 75 விக்கெட்டுகளும் 32 ஒருநாள் விக்கெட்டுகளும் அடங்கும்.

2006ஆம் ஆண்டு பங்களாதேசுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறி முகமான தம்மிகா பிரசாத். இறுதியாக 2015ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தார்.

2015ஆம் ஆண்டுக்கு பிறகு தோள்பட்டை காயம் காரணமாக கிரிக்கெட் வாழ்க்கையை தொலைத்த அவர். அதன்பிறகு மீண்டும் சிறப்பான பங்களிப்பை அணிக்கு வழங்கவில்லை.

2002ஆம் ஆண்டு முதல் எஸ்.எஸ்.சி.யைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி வரும் பிரசாத். 130 போட்டிகளில் இருந்து 29.1 சராசரியாக மொத்தம் 351 முதல் தர விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

# உலக செய்திகள்

## றுவாண்டா இனப்படுகொலை புரிந்தோர் தப்புவதற்கு பிரான்ஸ் உதவியமை அம்பலம்

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான றுவாண்டாவில் 1994ஆம் ஆண்டில் நிகழ்ந்த துட்சி இனப் படுகொலைகளுக்குப்பொறுப்பான ஹீட்டு ஆட்சியாளர்கள் மீது நடவடிக்கை எதனையும் எடுக்கவேண்டாம் என்று பிரான்ஸின் அன்றைய பிரான்ஸீவா மித்ரோன் அரசு அங்குள்ள தனது விசேட பிரதிநிதிக்கு ரகசியமாக உத்தரவிட்டது.

இதனை நிரூபிக்கின்ற பழைய ரகசிய தந்திப் பிரதி ஒன்று வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்ற தகவலை பிரான்ஸின் ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.1994 இல் றுவாண்டா படுகொலைகள் நிகழ்ந்த கையோடு பிரான்ஸ் அங்கு மேற்கொண்ட மனிதாபிமானப் படை நடவடிக்கைக்குப் பெயர் 'ஒப்ரேஷன்ட்றுக்கையஸ்'.

1994 ஜீனில் இனப்படுகொலைகள் நிறைவுற்ற சமயத்தில் பிரான்ஸ் அரசு அங்கு தனது படைகளை அனுப்பி வைத்தது. ஸயர் நாட்டில் இருந்து சென்ற 'ஒப்ரேஷன் ட்றுக்கையஸ்' படைகள், இன அழிப்பில் இருந்து தப்பிப் பிழைத்து லட்சக்கணக்கில் அகதிகளாகி அந்தரித்த துட்சி இன மக்களைப் பாதுகாப்பதற்கான மனிதாபிமானப் பாதுகாப்பு வலயங்களை ஸயர் நாட்டின் எல்லையோரம் நிறுவின.

துட்சி இன மக்களைக் கொன்றொழித்துப் பெரும் இனப்படுகொலை புரிந்த ஹீட்டு அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பாதுகாப்பு வலயங்களுக்குள் அவர்களுக்கும் தஞ்சம் அளித்து பின்னர் அவர்களில் பல முக்கிய சூத்திரதாரிகள் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்வதற்குப் பிரெஞ்சுப் படை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டுகள் நீண்டகாலமாக சுமத்தப்பட்டு வருகின்றன.

அத்தகைய குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையிலான ரகசிய ராஜதந்திர தந்தி ஆவணம் ஒன்றே தற்போது பழைய பெட்டகங்களில் இருந்து கிடைத்துள்ளது.பிரான்ஸின் விசேட தூதராக றுவாண்டாவில் தங்கியிருந்த ஒருவருக்கு பாரிஸில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட ரகசியத் தந்தி ஆவணமே பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகவலை பிரான்ஸ் மீடியாபாட், ஏ.எவ்.பி ஆகிய செய்தி நிறுவனங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டிருக்கின்றன. ஆபிரிக்காவில் பிரான்ஸ் பல நாடுகளை - குறிப்பாக றுவாண்டாவை தனது செல்வாக்கின் பிடியில் வைத்திருந்த காலப்பகுதிலேயே துட்சி இனப்படுகொலைகள் நடந்தேறின.

றுவாண்டா இனப்படுகொலை நிகழ்ந்த சமயம் பிரான்ஸில் பிரான்ஸீவா மித்ரோன் பதவியில் இருந்தார். றுவாண்டாவின் அன்றைய ஹீட்டு இன ஆட்சியாளரான யுவனல் ஹப்றி மனாவின் அரசுடன் மிக நெருங்கிய உறவைப் பேணி வந்தவர் மித்ரோன்.

1994 இல் சுமார் நூறு நாட்களில் எட்டு லட்சம் துட்சி இன மக்கள் மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதற்கு முன்னரும் பின்னரும் பிரான்ஸ் வகித்த பங்கு என்ன என்பது குறித்த பல ராஜீக இரகசியங்கள் கால் நூற்றாண்டுகள் கடந்த பிறகும் இன்னமும் உலகிற்குத் தெரியாமல் மூடி வைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அதிபர் ஒருவர் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அவர் உயிரிழந்து 25 ஆண்டுகள் கடக்கும் முன்னர் பகிரங்கப்படுத்துவதை பிரெஞ்சுச் சட்டங்கள் தடுக்கின்றன.

இந்த நிலையில் அதிபர் பிரான்ஸீவா மித்ரோனின் றுவாண்டா தொடர்பான இரகசிய ஆவணங்களை (1991-1995 ) அணுகிப் பரிசீலிப்பதற்கு வரலாற்று ஆய்வாளர் ஒருவருக்கு நாட்டின் அதிஉயர் நிர்வாக மன்றம் அண்மையில் அனுமதி வழங்கியிருந்தது.றுவாண்டாவில் பிரான்ஸின் தலையீடுகள் பற்றியபல ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்ட ஆய்வாளர் François Graner என்பவருக்கே நீதிமன்றத்தின் அனுமதி கிடைத்தது.

மித்ரோனின் றுவாண்டா ஆவணங்களைப் பரிசீலிக்க அனுமதி கேட்டு அவர் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்றங்களில் போராடிவந்தார்.அதன் பயனாகவே தற்போது இந்த ரகசிய ராஜதந்திர ஆவணம் அவரது கைக்குக் கிடைத்திருக்கிறது.அண்மைக்கால வரலாறுகளில் உலகம் வெட்கித் தலை குனிந்த மிகமோசமான இன அழிப்புகளில் ஒன்று றுவாண்டா படுகொலைகள்.

றுவாண்டாவின் பூர்வீக குடிகளான துட்சி இனத்தவர் மீது ஹீட்டு இனத்தவர்கள் கத்திகள், வாள்கள் கொண்டு நடத்தி முடித்த மிக மிலேச்சத்தனமானபடுகொலைகளில் மொத்தம் எட்டு லட்சம் துட்சிகள் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது.

ஈழத் தமிழர்களது முள்ளிவாய்க்கால் படுகொலைகள் போன்று இன்றைய உலக அரசியல் ஒழுங்கினாலும் அது சார்ந்த நிறுவனக் கட்டமைப்புகளாலும் தடுக்க முடியாமற் போன மாபெரும் மனிதப் பேரவலம் அது.



## ஏழை நாடுகளுக்கு தடுப்பூசிகளை நன்கொடை அளிக்க பிரித்தானியா திட்டம்!

பிரித்தானியாவில் எஞ்சும் தடுப்பூசிகளின் பெரும்பகுதியை ஏழை நாடுகளுக்கு நன்கொடை அளிப்பதாக பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உறுதியளிப்பார் என நம்பப்படுகின்றது.

அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெறும் ஒரு மெய்நிகர் ஜி-7 கூட்டத்தின் உரையில் இதனை அவர் அறிவிப்பார்.

மேலும், எதிர்காலத்தில் வளர்ந்து வரும் நோய்களுக்கான புதிய தடுப்பூசிகளை உருவாக்குவதற்கான புதிய 100 நாள் இலக்கை ஆதரிக்க பணக்கார நாடுகளை அவர் கேட்டுக்கொள்வார்.

பல்வேறு தடுப்பூசிகளின் 400 மில்லியன் அளவுகளுக்கு மேல் பிரித்தானியா முன்பதிவு செய்துள்ளது. எனவே அனைத்து பெரியவர்களுக்கும் தடுப்பூசி போட்டவுடன் பல மிச்சமாகும்.

ஆனால் வறுமை எதிர்ப்பு பிரச்சாரகர்கள் பிரித்தானியாவுக்கு இது போதுமானதாக இல்லை என்று கூறுகிறார்கள்.

உபரி எப்போது, எவ்வளவு விநியோகிக்கப்படும் என்பது குறித்த முடிவுகள் ஆண்டின் பிற்பகுதியில் எடுக்கப்படும்.



## முகநூலில் செய்திகளை பார்வையிட முடியாத நிலையில் அவுஸ்திரேலிய மக்கள்!

அவுஸ்திரேலிய மக்கள் முகநூலில் செய்திகளை பார்வையிடுவதையும் பகிர்ந்துகொள்வதையும் பேஸ்புக் தடை செய்துள்ளது. அரசாங்கத்தின் சுகாதார அவரச சேவை மற்றும் ஏனைய இணையத்தளங்களையும் பேஸ்புக் தடைசெய்துள்ளது. அவுஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ளவர்கள் அவுஸ்திரேலிய செய்தி இணையத்தளங்கள் எவற்றையும் முகநூல் மூலமாக பார்வையிட முடியாத நிலை காணப்படுகின்றது. அவுஸ்திரேலிய அரசாங்கம் பேஸ்புக்கின் இந்த நடவடிக்கை அதன் நம்பகதன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளது.

இந்த நடவடிக்கை பேஸ்புக்கின் கௌரவத்திற்கு என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்பது குறித்து அது சிந்திக்க வேண்டும் என அவுஸ்திரேலியாவின் தொடர்பாடல் போல் பிளெச்சர் தெரிவித்துள்ளார். சமூக ஊடக நிறுவனங்கள் தாங்கள் பயன்படுத்தும் செய்தி உள்ளடக்கங்களிற்காக அந்த செய்தி நிறுவனங்களிற்கு குறிப்பிட்ட தொகையை செலுத்தவேண்டும் என்ற அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உத்தேச சட்டத்திற்கு எதிராகவே பேஸ்புக் இந்த நடவடிக்கையை அறிவித்துள்ளது. கூகுள் பேஸ்புக்போன்ற இந்த உத்தேச சட்டத்தை எதிர்த்துள்ளதுடன் இந்த சட்டம் இணையம் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை வெளிப்படுத்தவில்லை தங்களின் தளங்களை நியாயமற்ற விதத்தில் தண்டிக்கின்றது என தெரிவித்துள்ளன. எனினும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த சட்ட மூலத்தை முன்னெடுக்கப்போவதாக தெரிவித்துள்ளது.



# பொம்மையை மனைவியாக்கிய இளைஞன் காரணம் என்ன தெரியுமா?

ஹாங்காங்கை (Hong Kong) சேர்ந்த 36 வயதான இளைஞர் ஒருவர், செக்ஸ் பொம்மை ஒன்றை தனது வருங்கால மனைவியாக தேர்வு செய்துள்ளார்..! ஹாங்காங்கை சேர்ந்தவர் ஸீ தியான்ராங் (வயது 36), தனது வருங்கால மனைவியாக (fiancee) செக்ஸ் பொம்மை ஒன்றை தேர்வு செய்துள்ளார். தற்போது பெற்றோருடன் தங்கியிருக்கும் அவர், பெண்களை விட, அந்த பொம்மை எளிதாக டேட் செய்ய வசதியாக இருக்கிறது என்கிறார். மோச்சி என்ற அந்த செக்ஸ் பொம்மைக்கு, iphone 12 உள்ளிட்ட விலை உயர்ந்த பல பரிசுகளை வழங்கி உள்ளாராம்.



20 செட் விலை உயர்ந்த ஆடைகளை தனது வருங்கால மனைவிக்காக வாங்கியுள்ள ஸீ, 10 ஜோடி செருப்புகளையும் வாங்கி கொடுத்துள்ளார். மோச்சியிடம் இதுவரை எல்லை மீறியது இல்லை எனவும், அதன் மென்மையான சருமத்திற்கு பாதிப்பு இல்லாமல் முத்தம் மட்டும் தந்தாகவும் ஸீ கூறியுள்ளார். செக்ஸ் பொம்மையுடன் இதுவரை அவர் உடலுறவு மேற்கொண்டது இல்லையாம்.

இது குறித்து அவர் கூறுகையில்., "இதற்கு முன்பு நான் கேர்ள் பிரண்டுகளை வைத்திருக்கிறேன். ஆனால் இப்போது எனக்கு பொம்மை மீது மட்டுமே விருப்பம் வருகிறது. நான் அதனுடன் உடலுறவு வைத்து கொண்டது இல்லை. அவளை மிகவும் மதிக்கிறேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ஹாங்காங்கில் உள்ள ஒரு கடையில் முதன் முதலில் செக்ஸ் பொம்மையை கண்டு அதனால் ஈர்க்கப்பட்டேன்.



அப்போது அதன் விலை 80 ஆயிரம் யுவான் (இந்திய மதிப்பில் 9 லட்சம் ரூபாய்க்கும் மேல்) ஆக இருந்தது. 2019 ஆம் ஆண்டு அதன் விலை 10 ஆயிரம் யுவானாக அதாவது இந்திய மதிப்பில் 10 லட்சத்துக்கும் அதிகமாக இருந்த போது, இந்த பொம்மையை வாங்கியிருக்கிறேன். என் காதலியை கவனித்து கொள்வதில் அதிக நேரம் செலவு செய்கிறேன்" என்றார்.

இதுபோல் நடப்பது ஒன்றும் புதிய நிகழ்வு அல்ல. கடந்த நவம்பரில், கஜகஸ்தானைச் சேர்ந்த ஒரு பாடிபில்டர் தனது செக்ஸ் பொம்மையை, எட்டு மாதங்கள் டேட்டிங் செய்து பின் திருமணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடதக்கது.

# தேனீக்களால் முழுவதுமாக உடலை மூடி இளைஞர் கின்னஸ் சாதனை..!

சீனாவை சேர்ந்த இளைஞர் ஒருவர் தேனீக்களால் தனது உடலை மூடி சாதனை படைத்துள்ளார்.

ஜியான்க்சி மாகாணத்தை சேர்ந்த Ruan Liangming என்பவரின் தலைமீது வாளிகளில் தேனிக்கள் கொட்டப்பட்டன.

உடல் முழுவதும் இவ்வாறு கொட்டப்பட்ட தேனீக்களின் எடை 140பவுண்டுகளாகும்.

அவரது இந்த சாதனை கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.



இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 21.02.2021 அன்று வெளியிடப்பட்டது.